பக்கங்கள்:09

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 28 வெள்ளிக்கிழமை 12.05.2023 கதிர்183

## தேரர்களின் நிதியில் தொல்லியல் பணிகள் வடக்கு கிழக்கில் தீவிரமாக முன்னெடுப்பு

### திணைக்களப் பணிப்பாளர் ஜனாதிபதி முன் ஒப்புதல்

போரால் 30 வருடங்களாக வடக்கு - கிழக்கில் தொல்லியல் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் அந்தப் பகுதிக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படுகின்றோம். ஆனால் இந்த ஆய்வுகளுக்கான அரச நிதி வளம் போதாது. பிக்குகளின் நிதி உதவியிலேயே அதனை மேற் கொள்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் தொல்லியல் திணைக் களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனதுங்க.

காணி முகாமைத்துவம் தொடர்பிலான நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சுரத்துக்களைதிருத்துவதுஉள்ளீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்றகலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் தொடக்கத்தில் பேசிய ஜனாதிபதி, தொல்பொருளியல்திணைக்களம் காணிகளைப்பெற்றுக்கொள்வது தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றது. அண்மையில் 2 ஆயிரம் ஏக்கர்கள் கோரப்பட்டிருந்து. பின்னர் அது 200 ஏக்கர்களாகியது. உண்மையில் நூறு ஏக்கர் வரையிலாதுதான் தேவையாக இருக்கலாம். ஆகவேஇவ்வாறான பிரச்சினைகள்ஏற்படாதுஎவ்வாறு நாம் தொடர்ந்து செயற்படுவது என்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.

இந்த இடத்தில் எனக்கொரு கேள்வியுள்ளது. அதாவது, தொல்பொருளியல் ☞2

## அங்கஜனின் பங்கேற்பு கட்சி ரீதியானது அல்ல

### சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவிப்பு

வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசுத் தலைவருக்கு இடையில் வியாழக்கிழமை தொடங்கிய இரண்டு நாள்கள் பேச்சில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டமை கட்சி ரீதியானது அல்ல என்று சிறிலங்காசுதந்திரக்கட்சியின் ஷான் விஜயலால் தெரிவித்தார். ☞2

மருதானையில்

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதியுடன் நேற்று நடந்த பேச்சு பெருமளவில் ஆக்கபூர்வமானதாக இல்லை என்று தெரிகின்றது. பழைய குருடி கதவைத் திறவடி கதையாக ஒரே விடயங்களே திரும்பத் திரும்ப பேசப்பட்டுள்ளன. எந்தவொரு விடயத்திற்கும் தீர்க்கமான தீர்வு காணப்படவில்லை. இவர்கள் சொன்னார்கள் அவர் கேட்டார். அல்லது அவர் சொன்னார் இவர்கள் கேட்டனர். இரு தரப்பினரும் சேர்ந்து ஒன்றையும் முடிவு செய்யவில்லை.

பேசப்பட்ட 5 விடயங்களிலும் எதிலுமே ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை என்பதை வெளியே வந்ததும் செல்வம் அடைக்கலநாதனும் சிறீதரனும் வெளிப்படையாகவே சொன்னார்கள். மற்றையவர்கள் எல்லோரும் பேசப்பட்ட விவரங்கள் என்று பலதையும் சொன்னார்கள். அவற்றிலிருந்தும் தெரிந்ததெல்லாம் உருப்படியாக ஒன்றுமில்லை என்பதுதான். ☞2

## உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தமிழ்த் தரப்பினரால் அடியோடு நிராகரிப்பு

### தற்போதைய சூழலில் பொருத்தமற்றது என்று ஜனாதிபதிக்கு எடுத்துரைப்பு

**உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான ஆளும் தரப்பின் யோசனையை அடியோடு நிராகரித்துவிட்டனர் வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள். படையினர் நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருக்கும் நிலையிலும், தொல்லியல் திணைக்களம் பௌத்த மேலாதிக்கவாதத்தை நிலைநிறுத்த முயலும் நிலையிலும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாத நிலையிலும் பயங்கரவாதம் தொடர்பான சட்டங்களால் தமிழர்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையிலும், காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கிட்டாத நிலையிலும் இப்போதைக்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதென்பது சாத்தியமில்லை என்று ஜனாதிபதியிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்**

**அரசுத் தலைவருக்கும் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.**

**படையினர் மற்றும் அரச திணைக்களங்களின் தேவைகளுக்காகக் காணிகளைச் சுவீகரிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இனிமேல் மேற்கொள்ளப்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் உறுதியளிக்கப்பட்டதைத் தவிர இந்தப் பேச்சில் உருப்படியான அடைவுகள் எவையும் எட்டப்படவில்லை.**

**ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான இரண்டு நாள் பேச்சு ஜனாதிபதி செயலகத்தில் மாலை 5 மணி முதல் 7 மணி வரை இடம்பெற்றது. இதில் 5 முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. தொல்லியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்** ☞2

## ஆட்சியாளர்களின் முறையற்ற செயலால் அரச சேவையாளர்கள் தேர்தல்களில் போட்டியிட முன்வரமாட்டார்கள்

### சுதந்திரக் கட்சி கருத்து

ஆட்சியாளர்ளின் முறையற்ற செயற்பாடுகளினால் எதிர்வரும் காலத்தில் அரச சேவையாளர்கள் தேர்தலில் போட்டியிட முன்வருவது சந்தேகத்துக்குரியதாகியுள்ளது என்று சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறவிருந்த நிலையில் ஆட்சியாளர்களின் முறையற்ற செயற்பாடுகளினால் தேர்தல் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது. இதனால் 80 ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் ☞2

## மன்னாரில் 2,000 பேருக்கு காணி அனுமதிப்பத்திரம்

ந.லோகதயாளன்

மன்னார் மாவட்டத்தில் காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான நிலத்தில் வாழ்பவர்களிற்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான நிலத்தில் குடியிருக்கும் 2 ஆயிரம் குடும்பங்களிற்கு எதிர்வரும் புதன் கிழமை இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

தலைமன்னார் பியர் பகுதியில் (ரிசாட் குடியிருப்பு) ஆயிரத்து 100 ☞2

## ரணிலுக்கு மீண்டும் முண்டு கொடுத்து துரோகம் செய்கிறது கூட்டமைப்பு

### கஜேந்திரன் எம்.பி. கடும் விமர்சனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் முண்டு கொடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் துரோகத்தினைச் செய்கின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வியாழக் கிழமை அவர் செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். .

அவர் மேலும் தெரிவித்ததாவது:,

ஜனாதிபதி பதவியில் உள்ள ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணை அற்றவர். அவர் தற்போது அப்பதவியில் நீடிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.

இதற்காக, அவர் சர்வதேச நாணய நியத்திடமிருந்து நீடித்த கடன்வசதியைப் பெற்றுக்கொண்டுள்ளார். குறித்த கடனையும் ☞2

## சர்வதேசப் பொறிமுறையை நாடுவதில் ஆட்சியாளர்கள் இரட்டை நிலைப்பாடு

### நாடாளுமன்றத்தில் சாடினார் சுமந்திரன் எம்.பி.

பாதிக்கப்பட்ட தமிழர்கள் சர்வதேசப்பொறிமுறைஊடாக நீதியைப் பெறுவதை மறுக்கும் இலங்கை ஆட்சியாளர்கள் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு இன்னொரு நாட்டு நீதிமன்றத்தை - சர்வதேச நீதிமன்றத்தை - நாடுகின்றது. இது ஆட்சியாளர்களின் இரட்டை நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே நாம் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோம்.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவருடைய உரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009ஆம் ஆண்டு மிக மோசமான முறையில் படுகொலைசெய்யப்பட்டஎமது உறவுகளுக்கு இதுவரை நீதி கிடைக்கப் பெறவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஸ்டிக்கப் படவுள்ள நிலையிலும் பல பிரச்சினைகளுக்கு நீதி கிடைக்கவில்லை.

ஆட்சியாளர்களின் இன அழிப்பினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் ☞2

## சிறுமிகள் கடத்தல் முயற்சி முறியடிப்பு சாரதியும் உதவியாளரும் மாட்டினர்

### மன்னாரில் நேற்றுச் சம்பவம்

மன்னார்,தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமம் பகுதியில் வியாபாரப் பொருட்களை ஏற்றி வந்த வாகனம் ஒன்று சிறுவர்கள் இருவருக்கு இனிப்புப் பொருட்களைவழங்கிகடத்தல் மேற்கொண்ட முயற்சி பொதுமக்களின் உதவியுடன் முறியடிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை மதியமளவில் வாகனத்தில் வியாபாரப்பொருட்களைவிற்பனை செய்ய வந்த வாகனம் ஒன்றில் இருந்த சாரதி அந்த வீதி வழியாகப் பயணித்த இரண்டு சிறுமிகளுக்கு இனிப்புப் பொருட்களை வழங்கியுள்ளார்.

இதையடுத்து அவர்களை வாகனத்தில் கடத்த முற்பட்ட சமயம் இரண்டு பிள்ளைகளும் தப்பிச்சென்று கிராமத்தவர்களுக்குத் தெரிவித்த நிலையில் கிராம மக்கள் இணைந்து குறித்த வாகனத்தையும் வாகன சாரதி மற்றும் உதவியாளர் ஒருவரையும் மடக்கிப் பிடித்துள்ளனர்.

சிறுமிகள் தப்பியோடி ஒழிந்த நிலையில் அவர்களுக்குப் பின்னால் வாகனத்தில் வந்தவர்கள் துரத்திக் கொண்டு வந்தனர் என்றும், வாகனத்தினுள் வெளிநாட்டு நபர் ஒருவர் இருந்தார் என்றும் ☞2

## முஸ்லிம்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி மு.காவுடன் பேசவேண்டும்

### நாடாளுமன்றல் தௌபீக் வலியுறுத்து

ஒவ்வொருமாவட்டத்திலும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் முஸ்லிம் மக்கள் தொடர்பிலும் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தவேண்டுமென அக்கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஇடம்பெற்றஎக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பானசபைஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் மக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் வசிக்கின்றார்கள். அவர்கள் அந்தந்த மாவட்டங்களில் மாறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். ஆகவே அவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தவேண்டும். ☞2

## தமிழர்களுடன் பேச முடியும் என்றால் முஸ்லிம்களுடன் ஏன் அது முடியாது?

### திருமலை எம்.பி. இம்ரான் கேள்வி

தமிழ் மக்களுடன் ஜனாதிபதி உண்மையாகப் பேச்சு நடத்த முடியுமாக இருந்தால் ஏன் முஸ்லிம் தலைமைகளுடன்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பேச முடியவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமைஇடம்பெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அம்மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவது போன்ற நாடகமொன்றை ஜனாதிபதி அரங்கேற்றிக் கொண்டுள்ளாரா என்ற சந்தேகம் எமக்குள்ளது.

ஜனாதிபதியைப்பொறுத்தவரையில் வெளிநாடுகளுக்கும், சர்வதேசத்தின் பார்வைக்குமாக தமிழ் மக்களையும் இணைத்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக காண்பிபதற்கு ☞2

## தமிழ் மக்களுக்கு இந்தியா இருப்பது போன்று முஸ்லிம்களுக்காக சவூதியை வரவைப்போம்

### நாடாளுமன்றில் சீறினார் பைசல் காசீம் எம்.பி.

தமிழர்களின் பிரச்சினைகளை இந்தியா பேசுவது போன்று முஸ்ம்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கு சவூதி அரேபியா போன்ற முஸ்லிம் நாடுகளை அழைத்துவருவதற்குத் தாம் தயார் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவரது உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்து அந்த மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுநடத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் மக்களைப் போன்றே முஸ்லிம் மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. அவர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டியது அவசியம். அதற்காக முஸ்லிம்களின் பிரதிநிதிகளுடனும் ஜனாதிபதி பேச்சு ☞2

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஜிஎஸ்பி சலுகையை பாதிக்கும்

### ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின்ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டிமசில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமைஇடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபைஒத்திவைப்புவிவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவருடைய உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இந்த வருட இறுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின்500மில்லியன் டொலர் பெறுமதியான வரிச்சலுகையை பெறும் நெருக்கடியை எதிர்கொள்கின்றது.

இலங்கைக்கு அதிகளவு அந்நியச் செலவாணியை பெற்றுத்தரும் ஆடை தொழில்துறை இந்த வரிச்சலுகையிலேயே தங்கியுள்ளது.

புதிய விதிமுறைகளின் கீழ் இலங்கை பாகிஸ்தான் உட்பட ஆறு நாடுகள் ஜி.எஸ்.பி.பிளஸ் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை இப்போது உருவாக்க முடியாது என்று தமிழ் அரசு, ஜனநாயகக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி உறுப்பினர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர். இந்த ஆணைக்குழு பற்றிச் சித்தார்த்தன் எம்.பி. சிலவற்றைச் சொன்னார். தென்னாபிரிக்காவில் போர் முடிந்து, தீர்வு காணப்பட்ட பின்னர்தான் இத்தகைய ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட்டது அப்படியிருக்கும்போது இங்கு இப்போது அத்தகைய ஆணைக்குழு பொருத்தமா என்று அவர் சுட்டிக்காட்டியதும் அவசரமாகப் பாய்ந்த ரணில், நாங்களும் நாளை (இன்று) பேசி தீர்வைக் கண்டபின்னர்தான் ஆணைக்குழுவை அமைக்கப்போகின்றோம் என்றார்.

என்னவொரு வேடிக்கை. இத்தனை ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டு வந்த பிரச்சினைக்கு ஒரே நாளில் தீர்வு கண்டுவிட முடியும் என்கிற ரணிலின் நம்பிக்கையை நினைக்க எனக்கே புல்லரிக்கீன்றது. அப்படி இன்று தீர்வைக் கண்டுவிட்டால், குறைந்தது இந்தஅடிப்படையில்தான்தீர்வு என்கிறஒருசட்டகத்தை(பிரேம் வோர்க்) வரைந்துவிட்டால் ரணிலை தலையில் சுமந்து யாழ்ப்பாணம் அழைத்து வர நான் தயார்.

பேச்சின் இடையில் குசும்புகளுக்கும் குறைவிருக்கவில்லை. காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினை தொடர்பில் பேசப்பட்டபோது, 1983ஆம் ஆண்டிலிருந்து காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியிருக்கிறார். உடனே குறுக்கிட்ட கிழக்கு எம்.பி. சாணக்கியன், இல்லையில்லை 1956இல் இருந்து விசாரிக்கவேண்டும் என்றிருக்கிறார். ரணில் உட்பட அங்கிருந்த எல்லோருக்குமே அவரது குசும்பு புரிந்தாலும் சிரிப்பைஅடக்கிக்கொண்டனர்.

பயங்கரவாதம் தொடர்பான சட்டங்கள் பற்றிப் பேசப்பட்டபோது, பெரும்பாலானவர்கள் அத்தகைய சட்டமே வேண்டாம் என்றார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக வேறு சட்டங்கள் கொண்டுவரத் தேவையில்லை என்றார்கள். அமைச்சர் டக்ளஸ் இடையில் புகுந்து, பல நாடுகளில் அத்தகைய சட்டங்கள் இருக்கின்றன, எனவே சர்வதேச நியமங்களுக்கு ஏற்பட அத்தகைய சட்டத்தைக் கொண்டு வரலாம் என்றார். ரணில் அவருக்கு அமைச்சுப் பதவி கொடுத்ததற்கான நன்றிக் கடனைச் செலுத்திய திருப்தி அவருக்கு அப்போது ஏற்பட்டிருக்கக்கூடும்.

தொல்பொருள்திணைக்களத்தின் பணிப்பாளர் மொழிப் பிரச்சினை காரணமாக வடக்குகிழக்கில் பலதவறுகள் நடந்துவிட்டன என்று ஏற்றுக்கொண்டார். அவை திருத்தப்படும்என்றார். ஆனால் எவ்போதுதிருத்தப்படும்என்று ஒன்றும் சொல்லவில்லை.

இப்படி ஜனாதிபதிக்கு முன்னாள் 'பம்மி' கூட்டத்தில் சூட்டைத் தணிக்கும் அதிகாரிகள், பின்னர் அவற்றைச் செயற்படுத்துவதில்லை என்பதும் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக்கொண்டுகாலத்தை இழுத்தடித்துவிடுவார்கள் என்பதும் பார்த்துப் பார்த்துப் பழகிப்போன விடயங்கள் தானே!

தொல்லியல் திணைக்களத்தின் விடயம் பேசப்படும்போது முன்னாள் முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் சில விடங்களை ரணிலுக்கு நேரடியாகவே காரசாரமாகக் கொடுத்தார். தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளமிடப்படும் இடங்களில் விகாரைகள் கட்டப்படுவது குறித்து அவர் ஆணித்தரமாகக் கருத்துக் கூறினார். இதுபோன்று தெற்கில் ஓரிடத்தில்சைவக்கோயிலைக் கட்டினால்பார்த்துக்கொண்டு சும்மா இருப்பீர்களா என்று ரணிலின் முகத்துக்கு நேரேயே கேட்டார். பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தார் ரணில்.

இந்த விடயத்தில் பட்டும் படாமலும் 1985க்கு முன்னதான வரைபடத்துக்கு எல்லாவற்றையும் பின்னகர்த்துவதற்குமுயல்கின்றோம் என்று சொல்லி முடித்துக் கொண்டார் ரணில். அப்படிப் பின்னகர்த்தும்போது கட்டிய விகாரைகளை இடிப்பார்களா என்பது தொடர்பில் எதுவும் சொல்லவில்லை. அது நடக்கப் போவதில்லை என்பது தெரிந்ததுதான் என்றாலும் சும்மா ஒரு ஒப்புச் சப்புக்கேனும்கூட அது பற்றி அவர் வாயே திறக்கவில்லை.

அரசியல் கைதிகள் விடயத்தில் இன்னும் வேடிக்கை. மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படக்கூடிய 16 பேர் இருக்கிறார்கள். அவர்களில் இரண்டு பேர் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களான முன்னாள் எம்.பி. மகேஸ்வரன் குடும்பத்தினரும் சரத்பொன்சேகாவும் அவர்களின் விடுதலைக்குச் சம்மதம்தெரிவிக்கவேண்டும் என்று காரணம் சொல்லப் பட்டது. அதாவது விடுவிக்கப் படக்கூடிய 14 பேரின் தலையெழுத்தும் இவர்கள் இருவரில்தான் தங்கியிருப்பதுபோன்று சொல்லியிருக்கிறார்கள். சரி அந்த இரண்டு பேரை விடுத்து எஞ்சியோரை உடனடியாக விடுவிக்கலாம்தானே என்ற கேள்விக்கு நேரடிப் பதிலில்லை. செய்கிறோம் என்றிருக்கிறார்கள். நடந்தால்கண்டுகொள்ளவேண்டியதுதான். அதற்கிடையில் ஆட்சி மாறிவிட்டால். பின்னர் அவர்களிடமும் முதலில் இருந்து தொடங்கவேண்டும்.

**இடிமின்னல்**

## தேரர்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்திடத்தில் திட்டமொன்று உள்ளதா? பாதைவழிபடமொன்று காணப்படுகின்றதா? இருக்கா இல்லையா என்பதை மட்டும் எனக்குக்கூறுங்கள் -என்றார்.

பதிலளித்த, தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர். அனுர மனதுங்க, தொல்பொருளியல் திணைக்களத்திடம் திட்டம் உள்ளது. இருப்பினும், கடந்த முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற போர் காரணமாக வடக்கு, கிழக்கில் தொல்பொருளியல் திணைக்களம் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை.. ஆகவே, வடக்கு, கிழக்கிற்கு முன்னுரிமை அளித்துதிணைக்களம்செயற்படுகின்றது. இதனால்தான், வடக்கு,கிழக்கில் அதிகளவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் வெளிப்படுகின்றது.

அதேநேரம், வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொல்பொருளியில் செயற்பாடுகள் தொடர்பிலான செலவீனங்களுக்கு அரச நிதி போதுமானதாக இல்லை. சில நன்கொடையாளர்கள், சர்வதேச முகவரகங்கள் உள்ளிட்டவைதான் அளிக்கின்றன. அதனைவிடவும் பௌத்ததேரர்கள்தான்நிதியை வழங்குகின்றார்கள்-என்றார்.

உடனே குறுக்கீடு செய்த ஜனாதிபதி, தனிநபர்களின் நிதியை, நாட்டின் தேசிய கொள்கைகளை முன்னெடுப்பதற்கு பயன்படுத்தமுடியாது. வரவு,செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியையே பயன்படுத்த வேண்டும் இல்லையேல் வெளிவளங்கள் திணைக்களத்தின் ஊடாக கிடைக்கின்ற நிதியைப் பயன்படுத்த வேண்டும். தனிநபர்களின் நிதியைப்பெற்றுஅவர்களுக்கு இசைவான வகையில் செயற்படமுடியாது. அவ்விதமான செயற்பாடுகளை முழுமையாக நிறுத்துங்கள்.

யாராவது தனிநபர்களோ நிறுவனமோ நிதியை அளித்து, வடக்கில் அதனைச் செய்யுங்கள் இதனைச் செய்யுங்கள் என்று கூறினால் உங்களால் அதற்கேற்பச் செயற்படமுடியாது. நீங்கள் அரச திணைக்களம். தனியார் துறை நிறுவனம் அல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அதேநேரம், நான் அநுராதபுரத்தில் ஆய்வுகளை முன்னெடுக்குமாறுகூறினேன். மல்வத்துவவில் ஆய்வுகளை முன்னெடுக்குமாறுகூறினேன். ஆனால் இன்னமும் அந்தச் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. ஆகவே அவற்றைப் பூர்த்திசெய்யவேண்டியுள்ளது. அதற்கு முன்னதாக, தொல்பொருளியல் திணைக்களம் பாதை வழிபடம் அங்கிய செயற்றிட்டத்தினை எம்மிடம் சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். அதற்கான அனுமதியை எமது ஆட்சி வழங்கியதன் பின்னர் அடுத்தகட்டநடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இதனைவிடவும், தொல்பொருளியல் திணைக்களம் அடையாளப்படுத்திய இடமொன்றில் எவரும் சென்று வீட்டைக்கட்டவோ, விகாரையை அமைக்கவோ முடியாது. அது அரசுக்குச் சொந்தமானது. அரசுக்குச் சொந்தமான பகுதியில் அவர்கள் தமது விருப்பப்படி நிர்மானங்களைச் செய்யும் பட்சத்தில் பொலிஸார் ஊடாக நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

இந்தவிடயத்தினைநான் வடக்கில் உள்ளவர்களுக்கும் தெரிவித்துள்ளேன். அதேபோன்று நிர்மானங்கள் முறையற்று மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனைத் தடுப்பதற்கு தேரர்கள் தேவையில்லை. பொலிஸார், படையினர் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுத்து தடுக்க முடியும்.

அதேநேரம், தனிநபர்களின் நிதியில் தொல்பொருளியல் திணைக்களம் செயற்படமுடியாது. அந்த நிதி பயன்படுத்தப்படுவதாக இருந்தால் அது நிச்சயமாக வெளிவளங்கள் துறை ஊடாகவே உள்ளீர்க்கப்படவேண்டும் - என்றார்.

## அரச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வேட்பு மனுத் தாக்கல் செய்த அரசசேவையாளர்கள் தொடர்பில் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கை தெளிவற்றதாகக் காணப்படுகிறது. வேட்பு மனுத் தாக்கல் செய்த அரச சேவையாளர்கள் போட்டியிட உத்தேசித்துள்ள தேர்தல் தொகுதிக்கு அப்பாற்பட்ட தேர்தல் தொகுதியில் சேவையாற்ற முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதிக்கு அப்பாற்பட்ட வகையில் சேவையாற்ற குறிப்பிடப் பட்டுள்ளதால் அரச சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால். ஒரு துறையில் சேவையாற்றிய அரச சேவையாளர் அருகில் உள்ள தேர்தல் தொகுதியில் அந்த சேவையை தொடர வசதிகள் இல்லாத நிலையில் அவர் மாகாணம் விட்டு மாகாணம் சென்று சேவையாற்ற பணிக்கப்பட்டுள்ளார். இதனால் அரச சேவையாள்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தினால் இந்த பிரச்சினைகள் ஏதும் தோற்றம் பெற்றிருக்காது. 80ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 7ஆயிரத்துக்கும் அதிகமான அரச சேவையாளர்கள் ஏனையோரை விட அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான நெருக்கடிகளினால் இனிவரும் காலங்களில் அரச சேவையாளர்கள் தேர்தலில் போட்டியிட முன்னிலையாகுவது சந்தேகத்துக்குரியது-என்றார்.

## உண்மை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கிரமிப்பு மற்றும் அத்துமீறல்கள் மற்றும் படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளின் விடுவிப்பு, பயங்கரவாதம் தொடர்பான சட்டங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டவர்கள் பிரச்சினை, உண்மைமற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகிய ஐந்து விடயங்கள் குறித்தே பேசப்பட்டன.

இந்தப்பேச்சுத்தொடர்பில் தமிழ் அரசுக் கட்சிப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியுடனான சுமார் இரண்டு மணித்தியால சந்திப்பில் காணிவிவகாரம், காணாமல்போனோர் பிரச்சினை, பயங்கரவாதத்தடைச்சட்டம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, அரசியல் கைதிகள் விவகாரம் ஆகியன தொடர்பில் பேசினோம்.

காணிவிவகாரத்தில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் பற்றிக் குறிப்பாகச்சுட்டிக்காட்டினோம். எமது கருத்துக்களை செவிமடுத்ததன் பின்னர் கடந்த இரு வருடகாலத்தில் பல்வேறு தவறான விடயங்களைச் செய்திருப்பதாக ஏற்றுக்கொண்ட தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர், அவற்றைத் தற்போது திருத்துவதாகக் குறிப்பிட்டார். திருத்துவதற்கு முன்னதாக அவற்றை உடனடியாக இடைநிறுத்தவேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்பு நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்துமாறும், இது பற்றிக் கலந்துரையாடித் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படும் வரையில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கக்கூடாது என்றும் ஜனாதிபதியினால் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

அதேபோன்று வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களைப் பொறுத்தமட்டில் 1985 ஆம் ஆண்டு வரைபடத்திற்கு மீண்டும் செல்ல முயல்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும், இதுவரையில் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படவில்லை என்ற விடயத்தையும் சுட்டிக்காட்டினோம்.

அதற்குப் பதிலளித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள், தாம் உரிய தரவுகளைத் தயாரித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வழங்குவதாகக் கூறினர்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அவசியமில்லை என்று நானும் சி.வி.விக்னேஸ்வரனும் எடுத்துரைத்தோம். அதுமாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் என்பதையும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினோம்.

அதேபோன்று வட, கிழக்கில் பாரதூரமான காணிப் பிரச்சினை நிலவுகின்றபோது உண்மை மற்றும் நல்லிணக்கஆணைக்குழுவைஏன் அமைக்கவேண்டும் என்று வினவினோம். குறிப்பாக இவ்விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடவேண்டியது அவசியம் என்றும், இருப்பினும் அதற்குரிய நடவடிக்கைகள் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினோம். அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி;, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

அரசியல்கைதிகள் விவகாரத்தைப் பொறுத்தமட்டில் தற்போது 14 பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டிருப்பதுடன் 16 பேர் தொடர்பில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களில் தீர்ப்பளிக்கப்பட்ட 14 பேரையும் விடுவிக்குமாறு வலியுறுத்தினோம். அதில் மகேஸ்வரன் படுகொலை மற்றும் சரத் பொன்சேகா கொலைமுயற்சிவழக்குகளில் தொடர்புபட்ட இருவர் குறித்துப் சம்பந்தப்பட்டவர்களின் கருத்து, சம்மதம் கோரப்பட்டிருப்பதாகவும் ஏனையோர் குறித்துப் பரிசீலிப்பதாகவும் பதில் வழங்கப்பட்டது - என்றார்.

இந்தப் பேச்சில் ஆளும் தரப்பில், அமைச்சர்களான விஜயதாசராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், சட்டமா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் தரப்பில், தமிழ் அரசுக் கட்சியைச்சேர்ந்தவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களான இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர்சம்பந்தன், பேச்சாளர் சுமந்திரன், எஸ்.சிறீதரன், சாள்ஸ் நிர்மலாநதன், இ.சாணக்கியன், கலையரசன் ஆகியோர் பங்கேற்றனர்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்தவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களான ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம், வினோ நோதராதலிங்கம், புளொட்தலைவர்சித்தார்த்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனும் சிறிலங்கா சுதந்தரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டனர்.

கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான வியாழேந்திரன் மற்றும் வடக்கு நாடாளுமன்றஉறுப்பினரான செ.கஜேந்திரன், கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகியோரும் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவில்லை.

## பயங்கரவாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரிச்சலுகைக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

மனித உரிமைகள் தொழிலாளர் உரிமைகள் நல்லாட்சி போன்ற விடயங்களை இலங்கை எவ்வாறு பின்பற்றியது என்பதை அடிப்படையாகவைத்தே2024 முதல் 2034 வரையிலான காலப்பகுதிக்குஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைவழங்குவதா என்பது தீர்மானிக்கப்படும்.

எனினும்இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நாட்டின் அரசமைப்பை மீறும் வகையில் அமைந்துள்ளது என்று கரிசனைகள் வெளியாகியுள்ளதால் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை பாதிக்கப்படலாம் - என்றார்.

## மன்னாரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களிற்கும், எழுத்தூர் பகுதியில் 400 குடும்பங்களிற்கும், துள்ளுகாரன் குடியிருப்பில் 95 குடும்பங்களிற்கும் பேசாலையில் 40 குடும்பங்களும் உள்ளடங்கலாக 2 ஆயிரம் குடும்பங்களிற்கு வழங்கப்படவுள்ளன.

2ஆயிரம்குடும்பங்களில் ஆயிரத்து 400 குடும்பங்கள் முஸ்லீம் குடும்பங்கள் 28 குடும்பங்கள் சிங்களக் குடும்பங்கள். இந்த நிலங்கள் யாவும் 2010ஆம் ஆண்டின் பின்பு வழங்கப்பட்டவை.

## சர்வதேசப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசபொறிமுறையிலான விசாரணையை தொடர்ந்து வலியுறுத்தும்போது சர்வதேச பொறிமுறை நாட்டுக்கு முரணானது, உள்ளக பொறிமுறை ஊடாகத் தீர்வு காணலாம் எனக் குறிப்பிட்டு ஆட்சியாளர்கள் இவ்வளவு காலமும் இழுத்தடித்து வந்தார்கள்.

தமிழர்கள் விடயத்தில் சர்வதேசபொறிமுறையிலான விசாரணையை மறுக்கும் ஆட்சியாளர்கள் எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துவிவகாரத்தில்நட்டஈடு பெற்றுக்கொள்ள மற்றொரு நாட்டின் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

இந்த செயற்பாடு ஆட்சியாளர்களின் இனவாத முகத்தை முழு உலகுக்கும் காண்பித்துள்ளது.நாங்கள் சர்வதேச நீதிமன்றத்தை நாடியதை மறுத்த ஆட்சியாளர்கள் பிறிதொரு நாட்டு நீதிமன்றத்தின் மீது நம்பிக்கைவைத்துஇப்போது செயற்படுவது, இவர்களின் இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் சர்வதேசபொறிமுறையிலான விசாரணையை கோருகிறார்கள். ஆகவே ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் பேச்சில் நாங்கள் சர்வதேச நீதிமன்றவிசாரணனையை அழுத்தமாகவலியுறுத்துவோம் - என்றார்.

## சிறுமிகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் தெரிவித்துள்ளார்

மக்கள் வாகனத்தை மடக்கிப் பிடித்துச் சோதித்த நிலையில் வெளிநாட்டவர் இருக்கவில்லை என்பதுடன் வாகனத்தில் இருந்த இரண்டு சந்தேகநபர்களையும் பொதுமக்கள் தலைமன்னார் பொலிஸிடம் ஒப்படைத்த நிலையில் தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகநபர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் (02)

## அங்கஜனின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளஸ்ரீலங்காசுதந்திரகட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஜனாதிபதியுடனான பேச்சில் பங்கேற்றுள்ளமையைக் கட்சியின் சார்பிலானமுடிவாகக்கொள்ள முடியாது. அது தவறு.

அவருக்கு வடக்கு, மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினார் என்ற அடிப்படையில் தான் அந்த மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பேச்சுக்களில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

குறித்தஅழைப்புஅவருக்கு கிடைத்தவுடனேயே அவர் கட்சியின் தலைமைக்கு அறிவித்திருந்தார். இந்த நிலையில் அவருக்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தற்போது முன்னெடுக்கப்படும் பேச்சின் ஊடாக தமிழ் மக்களுக்குஉண்மையாகஅதிகாரங்கள் பகிரப்பட்டு தீர்வு வழங்கப்படுமாக இருந்தால் நாம் அதற்கு எதிராகச் செயற்படப்போவதில்லை. எமது கட்சி அதிகாரப் பகிர்வுக்கு எதிரானது அல்ல.

ஆனால், குறித்த பேச்சு அடுத்த ஜனாதிபதி தேர்தலில்வெற்றிபெறுவதை மையப்படுத்தியதாக முன்னெடுக்கப்படுமாக இருப்பின் நாம் அதனை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை - என்றார்.

## ரணிலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய சர்வதேச நன்கொடைகளையும் உள்ளீர்ப்பதற்காகவும் செயற்படுகின்றார்.

இதற்கான, சர்வதேச நாணய நிதியத்தின் நிதி சரியான முறையில்தான் செலவிடப்படுகின்றது என்று காண்பிக்கவேண்டியதேவை ரணிலுக்குஉள்ளது. குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிதி நிறுவனங்களின் நிதியில் நல்லிணக்கம் சம்பந்தமான விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இனப்பிரச்சினைதீர்வுகுறித்து பேசப்படுகின்றது என்ற தோற்றப்பாட்டைக்காண்பிக்க முயல்கின்றார்.

இது, தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற நாடகமாகும். இவ்விதமான பின்னணிகளையெல்லாம் அறிந்து கொண்டதன் பின்னர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ரணிலுக்கு முண்டு கொடுப்பதற்குச் செல்வதானது, தமிழ் மக்களுக்குச் செய்யும் மிகப்பெரும் துரோகமாகும் - என்றார்.

## தமிழர்களுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவை உள்ளது.

ஜனாதிபதிஉண்மையாக தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டிருப்பராக இருந்தால் முஸ்லிம் தலைமைகளையும் அழைத்து அந்த மக்களின் விவகாரம் தொடர்பிலும் பேச்சுக்களை நடத்தியிருக்க வேண்டும். அந்த மக்களும் வடக்கு, கிழக்கில் வாழ்கின்றார்கள். அவர்களுக்கும் அங்கு பிரச்சினைகள் உள்ளன -என்றார்

## முஸ்லிம்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றுக்குத் தீர்வு வழங்கவேண்டும்.

2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இலங்கை ஆட்சியாளர்கள் அமைதிஉடன்படிக்கைசெய்து கொண்டபின்னர்முஸ்லிம்கள் முகங்கொடுத்தபிரச்சினைகள் அதிகமாகியிருந்தன.

இந்த நிலையில், தற்போது அவற்றுக்குத் தீர்வு காணப்படவேண்டும். அதற்காக முஸ்லிம்களின் பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தினைக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுநடத்தவேண்டும்எமது மக்களுக்கான உரிமைகள் வழங்கப்படவேண்டும் - என்றார்.

## தமிழ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தவேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பேச்சு மூலம் தீர்க்குமாறு இந்தியா குரல் கொடுக்கின்றது. இந்தியா முஸ்லிம்கள் பற்றி பேசுவதற்குத் தயாரில்லை என்றால் நாம் சவூதி அரேபியாவை அழைத்து வருவோம்.

எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எமக்காகவும் குரல்கொடுக்கச் சர்தேச அரங்கில் முஸ்லிம் நாடுகள்பலஉள்ளனஎன்பதை நினைவில் கொள்ளுங்கள் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22



# பொது மக்களின் வைப்புத்தொகை வங்கி முறைமை பாதுகாக்கப்படும்

## ஆளுநர் நந்தலால் உறுதி



சர்வதேச கடன் வழங்குநர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டாலும்பொதுமக்களின் வைப்புத்தொகை மற்றும் வங்கி முறைமை பாதுகாக்கப்படும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க உறுதியளித்துள்ளார்.

பொருளாதாரத்தின் நிலை, சவால்கள் மற்றும் முன்னோக்கு மத்தியவங்கியின் 2022 வருடாந்த அறிக்கை என்ற தலைப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு ஊகங்கள் இருந்தாலும், நிதி அமைப்பு ஸ்திரத்தன்மையைஉறுதிப்படுத்தமத்தியவங்கி எப்போதும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், எதிர்காலத்திலும் அவ்வாறே செயற்படும் என்றும் ஆளுநர் கூறியுள்ளார்.

ஒருவித உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் இருந்தாலும், பொதுமக்களின் வைப்புத் தொகையைப் பாதுகாப்பது மற்றும் வங்கி அமைப்பின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வட்டி விகிதங்கள், குறிப்பாக சந்தை வட்டி விகிதங்கள் ஆண்டின் இரண்டாம் பாதியில் வேகமாகக் குறையும் என எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் நான்காவது காலாண்டில் பணவீக்கம் ஒற்றை இலக்க புள்ளிகளுக்குக் குறையும் என்றும், குறிப்பாக முழுமையான கடன் மறுசீரமைப்பு செயல்முறை அறிவிக்கப்பட்டவுடன் வட்டி விகிதங்களும் வேகமாகக் குறையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# 16 மாணவிகள் துஷ்பிரயோகம் ஆசிரியர் களுத்துறையில் கைது!

16 மாணவிகளை துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் ஆசிரியர் நேற்று (வியாழக்கிழமை) காலை களுத்துறை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதான அவர், கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர் எனவும் சந்தேக நபர் திருமணமானவர் என்றும் அவருக்கு எதிராக மனைவியும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளானவர்களில் களுத்துறை பிரதேச பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவரின் மகளும் உள்ளடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சந்தேகநபர் சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்யும் போது எடுத்த வீடியோ பதிவுகள் உள்ளிட்டவற்றைக் கொண்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

குறித்த ஆசிரியர் வேறு இடங்களில் பிரத்தியேக வகுப்புகளை நடத்தியுள்ளார் என்றும் சிறுமிகளும் அங்கும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டார்களா இல்லையா என மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கூறியுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளுக்கு 1929 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# பொது மக்களின் முறைப்பாடுகளை அடுத்து 200 அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

## ஜானக வகும்புர விசாரணை

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளில் பணிபுரியும் 200 அதிகாரிகளுக்கு எதிராக நாடு பூராகவும் மக்கள் முறைப்பாடுகளை செய்துள்ளனர் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.

இதேவேளை மக்களுக்கான சேவைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொடுப்பதில்லை, உதாசீனம், தரக்குறைவாக நடந்துகொள்ளல் உள்ளிட்ட பல முறைப்பாடுகள் இந்த அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தி குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கவிடயமாகும்.



# யாழில் இந்திரவிழாவில் இம்முறை பிரமாண்டங்களின் அணிவகுப்பு


இலங்கையில் முன்னொரு போதும் இல்லாத வகையில் யாழ். வல்வெட்டித்துறையில் அண்மையில் இடம்பெற்ற இந்திர விழாவில், இந்து தெய்வங்களின் உருவங்கள் மின்னமைப்பால் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இது வரலாற்றுச்சாதனையாகப் பதிவாகியுள்ளது.

இந்திரவிழாவிலே அனைத்து மக்களையும் கவர்ந்து அனைவரின் பாராட்டுக்களையும் பெற்று இந்திர விழாவை புதியதொரு பரிணாம வளர்ச்சிக்கு இட்டுச்சென்ற பெருமை ஆதிவைரவர் மின்னமைப்பையே சாருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.









2023 ஆம் ஆண்டில் இந்திர விழாவில் ஆஞ்சநேயர் 70 அடி உயரம், மாயவர் 28 அடி உயரம், 46அடிஅகலம்ஸ்ரீமுத்துமாரியம்மன் 50அடிஉயரம்,கிருஷ்ணர்ராதை34 அடிஉயரம்காணப்பட்டுபக்தர்களின் மனதினைகொள்ளையடித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

## நீதிக்கான மையத்தின் ஏற்பாட்டில்



நீதிக்கான மையத்தால் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்வழங்கும் நிகழ்வு மையத்தின் சாய்ந்தமருது காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் விடுத்த வேண்டுகோளை ஏற்று நீதிக்கான மையத்தால் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நீதிக்கான மையத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நீதிக்கான மையத்தின் பிரதித் தலைவர் யூ.கே.எம்.றிம்சான், பொருளாளர் ஏ.ஏ.அஷ்ரஃப் அலி, சட்டத்தரணி எம்.ஷிபான், சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பொதுச்செயலாளர் ஏ.எல்.எம்.முஜாஹித், பொருளாளர் நூருல் ஹுதா உமர், பிரதித் தலைவர் எஸ்.அஷ்ரஃப்கான், பிரதிச் செயலாளர் எம்.எம்.ஜபீர் செயற்குழு உறுப்பினர்களான எம்.வை. அமீர், எஸ்.ஜனூஸ் உள்ளிட்ட ஊடகவியலாளர்களான அஸ்லம் எஸ்.மௌலானா, பாறூக் ஷிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நீதிக்கான மையத்தால் கடந்த காலங்களில் தெரிவு செய்யப்பட்ட தமிழ், முஸ்லிம் பாடசாலை மாணவர்களுக்கு 'மகிழும் இதயம்' திட்டத்தினூடாக கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# முத்தையா முரளிதரனுடன் முகேஷ் அம்பானி இணைவு!

## வெளியான தகவல்

ஆசியாவின் பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்திலிருக்கும் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம், குஜராத்தை சேர்ந்த கேம்பா கோலா குளிர்பான நிறுவனத்தை வாங்கியதுடன், அந்த குளிர்பானத்தை சந்தைப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

இதன்படி ''த கிறேட் இந்தியன் ரேஸ்ற் திஸ் சமர்''என்ற வாசகத்துடன் 50 ஆண்டுகளுக்கு முன்பு கெம்பா கோலா மிகவும் பிரபலமான குளிர்பானமாக இருந்துள்ளது.

இதனை புதிதாக சந்தைப்படுத்தியுள்ள ரிலையன்ஸ் நிறுவனம் கேம்பா கோலா, கேம்பா ஆரஞ்சு, கேம்பா லெமன் என மூன்று வகையான குளிர்பானங்களாக அறிமுகம் செய்துள்ளன.

இலங்கை நிறுவனத்துடன் கைகோர்க்கும் முகேஷ் அம்பானியின் நிறுவனம் இந்நிலையில் கேம்பா கோலாவை மேலும் முன்னேற்றும் வகையில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனின் நிறுவனத்துடன், ரிலையன்ஸ் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக முரளிதரனின் சிலோன் பீவரேஜ் இண்டர்நேஷனல் நிறுவனத்துடன் இணைந்து, அலுமினிய கேன்களில் கேம்பா கோலாவை பெக்கிங் செய்து விநியோகம் செய்யவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக சிலோன் பீவரேஜ் நிறுவனம் வரும் காலத்தில் இந்தியாவில் பெக்கிங் பணிக்காக தொழிற்சாலையை அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1970-1980களில் இந்திய கோல்ட் டிரிங்க் சந்தையில் முன்னிலையிலிருந்த கேம்பா கோலா நிறுவனத்தை மீண்டும் சந்தைப்படுத்தியிருப்பதோடு, முரளிதரனுடன் இணைந்திருப்பது வணிக உலகத்தில் பேசு பொருளாகியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# உருப்படியான நகர்வு

அரசுத் தலைவருடன் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நடத்திய பேச்சுக்களில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு காத்திரமான எதிர்ப்புக் காட்டப்பட்டிருக்கின்றது. இந்த ஆணைக்குழுவைத் தமிழர்களுடன் எந்தக் கலந்துரையாடலும் நடத்தாமலேயே அவர்கள் மீது திணிப்பதற்கு ஆளும் தரப்பு எடுத்த நடவடிக்கைக்கு ஒரு முட்டுக்கட்டை இடப்பட்டிருக்கின்றது. இது உருப்படியான ஓர் நகர்வு. பாராட்டுக்குரியது.

2015 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பொறுப்புக்கூறலுக்கான கலப்பு விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைக்க இணங்கிய ரணில் விக்கிரமசிங்க பின்னர் அதை மெல்லக் கைவிட்டார். அப்போது அரசுத் தலைவராகவன்றி தலைமை அமைச்சராக (பிரதமர்) இருந்தார் அவர். அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல மேற்கு நாடுகளின் ஆதரவுடன் மனித உரிமைகள் பேரவையில் இந்தக் கலப்புப் பொறிமுறைக்கான தீர்மானம் 30/1 நிறைவேற்றப்பட்டபோது அதற்கு இணை அனுசரணை வழங்கி ஆதரவு தெரிவித்திருந்தவர், பன்னாட்டரங்கில் நெருக்கடியைச் சமாளித்தவுடனே அதைக் கிடப்பில் போட்டார். அது மட்டமல்ல, தனது ஆட்சிக் காலம் இறுதியை நெருங்கிக்கொண்டிருந்தபோது இதுபோன்ற பொறிமுறைகள் இலங்கைக்குப் பொருத்தமானவை அல்ல என்றும் பல அறிக்கைகளை விட்டார். அப்படிக் கலப்புப் பொறிமுறை பொருத்தமற்றதாயின் அதற்கு முதலில் இணங்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?

மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றிய கலப்புப் பொறிமுறைக்கான தீர்மானத்தையே தமிழ் மக்களில் கணிசமான பகுதியினர் ஏற்கவில்லை. அதற்குக் காரணம் இலங்கையில் நடக்கக்கூடிய எத்தகைய நீதி விசாரணைகளாக இருந்தாலும் அவையெல்லாம் ஒருபோதும் நியாயமானவையாக இருக்காது என்கிற அவரகளின் முடிந்த முடிபுதான். கலப்புப் பொறிமுறை என்பதே ஒரு ஏமாற்று வித்தை என்று அவர்கள் விமர்சித்தார்கள். இருப்பினும் அப்போது தமிழர்களின் பேராதரவைப் பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கலப்புப் பொறிமுறையை ஏற்றுக்கொண்டது. அதைச் செயற்படுத்துமாறு திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்தது. ஆனால் ரணில் அதைக் கைவிட்டார்.

அதன் பின்னர்தான் தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றி அவர் பேசத் தொடங்கினார். ஆனால், அது பற்றி எந்தவொரு கலந்துரையாடல்களையும் தமிழர் தரப்புக்களுடனோ போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடனோ நடத்தவில்லை. பின்னர் இந்த வருடத்தில் திடீரென வடக்குக்கு வருகை தந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தமது சந்திப்புக்களில் இந்தக் ஆணைக்குழுவைப் பற்றியும் கருத்துக் கேட்டார்கள். ஆணைக்குழுவை அமைப்பது குறித்த எந்தத் தெளிவுபடுத்தல்களும் இல்லாமல், ஆணைக்குழு எப்படிப்பட்டதாகஇருக்கும்என்றுஎதனையும்விளங்கப்படுத்தாமல் கருத்துக்களைக் கேட்டுவிட்டு வடக்கு மக்கள் அதற்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதைப் போன்ற ஓர் அறிக்கையை அரசுத் தலைவருக்கு வழங்கினார்கள்.

அதைத்தொடர்ந்துஅயலுறவுத்துறைஅமைச்சர்அலிசப்ரியும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் தென்னாபிரிக்காவிற்குச் சென்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில்ஆராய்ந்தார்கள். தென்னாபிரிக்கஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இருந்தவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். அதன் பின்னரும்கூட அத்தகைய ஒரு ஆணைக்குழு தொடர்பில் ஆளும் தரப்பினர் தமிழர்களுடன் எதுவும் நேரடியாக எதுவும் பேசவில்லை. தமது நகர்வுகள் மூலம் தமிழர்களிடம் அந்தத ஆணைக்குழுவைத் திணிக்கப்பார்த்தார்கள். அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்தகைய ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்கு முன்னர், 2015இல் இணங்கிய கலப்புப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தாது விட்டதற்கான காரணங்களை அரசுத் தலைவரும் ஆளும் தரப்பினரும் தெளிவுபடுத்தவேண்டும். அத்தகைய பொறிமுறையைச் செயற்படுத்த சட்டத் திருத்தங்கள் அவசியமானவை என்றால் அவற்றைச் செய்யவேண்டுமே தவிர, தட்டிக் கழிக்கக்கூடாது. தமிழர்கள் எதிர்பார்ப்பது உண்மையானநீதியை, பொறுப்புக்கூறலைமட்டுமே. அதைவிடுத்து சமாளிப்பதற்கான ஆணைக்குழுகளை அல்ல.

எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தரப்பினர் இப்போதைக்கு அத்தகைய ஆணைக்குழு ஒன்று அவசியமல்ல என்று திட்டவட்டாகத் தெரிவித்திருப்பது வரவேற்புக்குரியது. அதில் அவர்கள் தொடர்ந்தும் பிடிவாதமா இருக்கவேண்டும்.

# பியத் நிகேஷலவிற்கு பாதுகாப்பு வழங்குக

## சஜித் வலியுறுத்து

காலிமுகத்திடல்போராட்ட இயக்கத்தின் முன்னணியில் இருந்த சமூக ஆர்வலரான பியத்நிகேஷலவிற்குபாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று (வியாழக்கிழமை) கருத்து தெரிவிக்கும்போதுஎதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸஇந்த விடயத்தைக்குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்கடுவளையின் முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்னவால், பியத் நிகேஷலதாக்கப்பட்டசம்பவம் தொடர்பிலும்அவர்இதன்போது கேள்வி எழுப்புள்ளார்.

மேலும், பியத் நிகேஷலவுக்கு உடனடியாக பாதுகாப்புவழங்கப்படவேண்டும் எனவும், தாக்குதலில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராக சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி முன்னெடுக்கப் பட்ட போராட்டத்தின் போது கடுவலை துணை மேயர் ஆற்றிற்குள் இழுத்துச் செல்லப்பட்ட காணொளியினை பதிவேற்றியமைக்காக சமூக ஊடக செயற்பாட்டாளர் பியத் நிகேஷலா என்பவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பத்தரமுல்ல-கொஸ்வத்த பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதலை கடுவலை மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்னஉள்ளிட்டகுழுவினர் மேற்கொண்டுள்ளனர்எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கடுவலைமாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்ன கைது செய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# பதவிகளைத் தக்கவைக்க அரசியல்வாதிகளின் பின்னால் ஓடும் ஆளுநர்கள்!

வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் ஆளுநர்களை உடனடியாகப் பதவி விலகுமாறு அரசு உத்தரவிட்டுள்ளதால் அவர்கள் அந்தப் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகச் செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளின் உதவியை நாடியுள்ளார்கள் என்று அறியமுடிகின்றது.

தமதுபதவிகளைஉறுதிப் படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டள்ளனர் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆளுநர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஸ்ரீலங்காபொதுஜனபெரமுன எம்.பிக்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்முறைப்பாடுகளை முன்வைத்து வந்தனர்.

'அவர்களுக்கு அரசியல் தெரியாது;அரசியல்வாதிகளை மதிக்கத் தெரியாது. இராணுவத்தைப் போல் தங்களுடன் கடுமையாக நடந்து கொள்கிறார்கள்'என்றெல்லாம் அவர்கள் முறைப்பாடு செய்தனர்.

கடந்த வாரம் நடைபெற்ற அரசஎம்.பிக்களின் கூட்டத்தில் கூட ஜனாதிபதியிடம் இதே முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

அதிலும், ஆளுநர்கள் வசந்தகருணாகொட,ரொஷான் குணதிலக ஆகியோர் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை அவர்கள் முன்வைத்தனர். இவர்கள்விலகியே தீரவேண்டும்என்றுஅவர்கள் வலியுறுத்தினர்.'மொட்டு'க் கட்சிகளின் ஆதரவு தனக்குத் தேவை என்பதால் ஜனாதிபதி, அவர் களின் கோரிக்கையை ஏற்று ஆளுநர்களை விலகுமாறுஉத்தரவிட்டுள்ளார் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (02)

# பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அலுவலகக் கூரை மீதேறி போராட்டம்

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கீர்த்தி ரணசிங்க, கூரை மீது ஏறி போராட்டம் ஒன்றில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுரங்க மற்றும் புவிசரிதவியல் பணியகத்தின், அம்பாறை அலுவலக கூரையில் ஏறியே இறதப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

குறித்த அலுவலகத்தின் தற்போதைய பிரதானியை நீக்குமாறுகோரியேஅவர்இந்த போராட்டத்தைமுன்னெடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மணல் அகழ்வு உரிமம் உரிய காலத்தில் வழங்கப்படவேண்டும்எனவும் அனைத்து இன மக்களுக்கும் சமமாக உரிமம் வழங்கப்பட வேண்டும்என்றும்கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அவரது ஆதரவுடன் சுமார் 50 மணல் உரிமதாரர்கள் அடங்கிய குழுவும் இந்த அலுவலகத்தின் முன் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# நாட்டின் கல்வித்துறையில் புதியதான சீர்திருத்தங்கள்

## லண்டனில் முக்கிய கலந்துரையாடல்

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும், உலக வங்கியின் உலகளாவிய கல்விப் பணிப்பாளர் ஜேமி சாவேத்ராவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

லண்டனில் நடைபெற்று வரும் உலகக்கல்வி மாநாட்டின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் கல்வித் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் உலகளாவிய கல்வி இலக்குகளை அடைவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.



# குருநாகல் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்பு

குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு மே 8 அன்று, இனம் தெரியாதநபர் ஒருவரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவத்தையடுத்து, வியாழக்கிழமை வைத்தியர்கள் தமது கடமைகளில் இருந்து விலகி ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் முறைப்பாடுஅளித்தபோதும், குறித்த நபரைக் கைது செய்யாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று கடமையில் இருந்து விலகி, வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலை நிறுத்தத்தால் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பணிகள் பாதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர்களின் இந்த நடவடிக்கையால் ஏராளமான நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அடையாள வேலை நிறுத்தம் இன்று காலை 8.00 மணி வரை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### களுத்துறை மாணவி சாவு:

# ஹோட்டல் உரிமையாளரின் மனைவியும் நேற்று கைது!

களுத்துறையில் விடுதி ஒன்றின் மூன்றாவது மாடியிலிருந்து விழுந்து 16 வயதான மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குறித்த ஹோட்டலின் உரிமையாளரின் மனைவி பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோட்டலுக்குக்குறித்தமாணவி வந்த போது உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் அடையாள அட்டை உள்ளிட்ட விபரங்களைச் சரி பார்க்கத் தவறியதற்காக உரிமையாளரின் மனைவி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த மாணவியின் தொலைபேசி தரவுகள் பெறப்பட்டுள்ள நிலையில், அதனூடாகமேலதிகவிசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், குறித்த மாணவியின் கைபேசி சம்பவ தினத்தில் காணாமல்போயுள்ள நிலையில், அதனைக் கண்டுபிடிக்கத் தொடர்ந்தும்தேடுதல்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



குறித்த மாணவி இறுதியாக ஆசிரியர் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடினார் என்று தெரியவந்ததையடுத்து அந்த ஆசிரியரிடமும் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர். (02)

# டெங்கு ஒழிப்பு தொடர்பில் கிளிநொச்சியில் ஆராய்வு



கிளிநொச்சி மாவட்டத்தின் கேட்போர்கூடத்தில்டெங்குஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுமாவட்டசெயலாளர்ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடல் நேற்று (வியாழக்கிழமை) 2.30 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது, மாவட்டத்தில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தல் மற்றும் நுளம்பு பெருகும் இடங்களைபிரதேசசெயலாளர்பிரிவுகள் எனும் அடிப்படையில் துப்புரவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில்கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கலந்துரையாடலில்பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர் மகேந்திரன், மாவட்ட பொது வைத்தியசாலை பொறுப்பு வைத்தியர், கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகியவற்றின் பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட தொற்றுநோயியல் பிரிவு வைத்திய பொலிஸாரும் கலந்து கொண்டுள்ளார்கள்.



அத்துடன் இராணுவத்தினர் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர்கள், கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்எனப்பலரும்கலந்து கொண்டனர்.

மேலும்,எதிர்வரும்15ஆம்திகதி கரைச்சிபிரிவில்உள்ளஅனைத்து அமைப்புக்கள்,திணைக்களங்கள், தொழிற்சாலைகள் அனைத்தையும் ஒன்றாக்கி சிரமதானம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கட்டுநாயக்க விமான நிலையத்தில் யாழ். இளைஞன் ஒருவர் கைது!

### போலி கனடா விசாவுடன்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து யாழ். இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி கனேடிய வீசாவைப் பயன்படுத்தி வெளிநாடு சென்ற நபர் ஒருவரை கட்டுநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைபிரதேசத்தைசேர்ந்த 21வயதுடையநபரேஇவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

டோக்கியோ ஊடாக கனடாசெல்லவிருந்தபோதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபருக்கு போலி வீசா வழங்கியவர்களைக் கண்டுபிடிப்பதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கைதி உயிரிழப்பு

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்த சிறைக் கைதி ஒருவர் யாழ்ப் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்றுவந்தநிலையில் இன்று உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், யாழ்ப்பாணத்தின் உடுவில் பகுதியைச் சேர்ந்த 32 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை எனத் தெரியவந்துள்ளது.

சிறுநீரகப் பாதிப்புக் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ஜனக ரத்நாயக்கவும் ஜனாதிபதி தேர்தலில்

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின்தலைவர் ஜனக ரத்நாயக்க 2024 ஆம் ஆண் டு நடைபெற வுள்ள ஜனாதிபதித் தேர் தலில் போட்டி யிடவுள்ளார் எனத் தகவல்கள்வெளியாகியுள்ளன.

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக மின் வெட்டை நிறுத்துமாறு கூறியும் அவர் மக்கள் பக்கம் நின்று செயற்பட்டுள்ளார்.இதற்காக அவருக்கு எதிராக அரசாங்க



நடவடிக்கைஎடுக்கவுள்ளதாக தகவல்கள்வெளியாகியுள்ளன.

இந்தநிலையில், அவர் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

# பிரித்தானிய நாட்டவர் இலங்கையில் கைது!

தென்னிலங்கையில் விபத்தை ஏற்படுத்திய பிரித்தானியபிரஜைஒருவர்கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

ஹபராதுவ நகரில் ஜீப் வண்டியை செலுத்தி கார் மற்றும் மற்றுமொரு ஜீப் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரித்தானிய பிரஜைமதுபோதையில்காலி நோக்கி சென்ற வேளையில் விபத்து ஏற்பட்டுள்ளது.

ஹபராதுவ நகரில், பிரித்தானியர் ஜீப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் அவர் ஓட்டிச்சென்றவாகனம் மாத்தறைநோக்கிச்சென்றகார் மற்றும்ஜீப்மீதுமோதியுள்ளது.

வெளிநாட்டு பிரஜை மதுபோதையில் வாகனம் செலுத்தியமைமற்றும்விபத்தை தவிர்க்கத்தவறியமைஆகிய குற்றச்சாட்டுக ளின் கீழ் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளைபொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# திருக்குறளின் வழியில் வாழ்வின் இரு கண்கள்



ர.தக்ஷிகா
யா/ வேம்படி மகளிர் கல்லூரி

திருக்குறள் மனிதன் வாழ்வாங்கி வாழ வேண்டிய வழியை அறுதியிட்டு உறுதியாகக் கூறும் நூல். அதனால் தான் திருக்குறளை 'உலகப் பொதுமறை' என்று போற்றுகின்றனர். உலக மொழிகள் பலவற்றில் மொழியாக்கம் செய்யப்படும் அளவிற்கு மனித இனத்திற்கு அறவழியைக் கூறுகின்ற அரிய தமிழ் நூலாக திருக்குறள் ஒளி வீசி உயர்ந்து நிற்கின்றது. ஆகையால் உலக நாகரிகத்திற்கு தமிழினத்தில் பங்களிப்பில் திருக்குறள் தலையானது. மிகக்குறுகிய ஒரு வடிவத்திற்குள் பன்முகன் சிந்தனைகளைச் செறிவுடன் தருகின்ற நிலையில் திருக்குறள் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றது. திருவள்ளுவரை கீழைத்தேசத்தவரும் மேலைத்தேசவரும் இனம், மொழி, மதம் கடந்து கொண்டாடுகிறார்கள் எனின் அந்நூல் கொண்டுள்ள உயரிய கருத்துக்கறுக்காகத் தான் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

விஞ்ஞான தொழில்நுட்பம் நம்மை கணினி யுகத்திற்கு உயர்த்தியிருந்தாலும் இன்றைய இளம் சந்ததியினர் நாளைய சிறந்த குடிமக்களாக மாறுவதற்கு ஊற்ற சீரிய பண்பாட்டை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகின்றது.

இந்த வகையில் சமுதாயத்தில் எந்தத் துறையிலும் ஈடுபட்டு உழைப்பவர்களாயிருந்தாலும் அவ்வத்துறையில் அவர்கள் செம்மையாக தமது கருமங்களை ஆற்றக்கூடிய ஆற்றல்களையும் பெறுவதற்கேற்ற அறிவுரைகளையும் வழங்கக் கூடிய நூலாக திருக்குறள் காணப்படுகின்றது. வாழ்வின் இலட்சியங்களுக்கு இலக்கணங்கள் கற்பிக்கவல்ல குறள்பாக்களை தெய்வப்புலவர் திருவள்ளுவர் நமக்கு தந்துள்ளார். அதனாலன்றோ பாரதியார் அவரை,

'வள்ளுவன் தன்னை உலகினுள்ளே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

– என்று பாராட்டுகிறார்.

அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலால் வகுத்து, நான்காவதான வீட்டின்பம் பெறும் வழியுங்காட்டி, ஆயிரத்து முந்நூற்றி முப்பது அருங்குறள் வெண்பாக்களில் ஒவ்வொன்றும் ஏழு கடலளவு பொருளடக்கத்தை தம்முட் கொண்ட அணுவளவாகச் சுருங்கிய ஒன்றான திருக்குறளை தெய்வப்புலவர் இற்றைக்கு பல ஆண்டுகள் முன்னதாக நமக்கு அளித்துள்ளார். அத்தகைய சிறப்புடைய திருக்குறளை ஔவையார்,

'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறிந்த குறள்'

– என்று போற்றுகிறார். ஒரு மனிதனின் இரு கண்களாக கல்வியும் ஒழுக்கமும் நோக்கப்படுகின்றது. ஒருவனைச் சுற்றி பல கண்கள் பார்க்கின்றன. எவ்வாறாயிருப்பினும் நாம் எமது கண்களை பாதுகாப்பதில் கவனமாக இருக்க வேண்டும். ஒரு கண்ணாக கல்வி இருப்பினும் மற்றைய கண்ணாக ஒழுக்கம் அவசியமாகின்றது. அதாவது மனிதன் தனது ஒரு கண் பார்வையோ, அழகையோ பெற்றுவிடமுடியாது. ஆனால் அவனது மற்ற கண்ணும் பக்கபலமாக இருந்தால் அவனது முகம் முழுமையடைந்து பிரகாச ஒளியில் திகழ்கின்றது. எனவே ஒருவனுக்கு கல்வி அறிவோடு நல்ல ஒழுக்கமும் காணப்படவேண்டும். கல்வி பற்றியோ, ஒழுக்கம் பற்றியோ அல்லது வாழ்வின் ஒவ்வொரு படிநிலையிலும் தேவைப்படுகின்ற பண்பைபற்றிய பன்முகன் சிந்தனைகளைச் சுருக்கி மக்களுக்குப் பட்டறிவாகக் கொடுக்கின்ற நூலாக திருக்குறள் அமைந்துள்ளது. திருக்குறளின் அடிப்படையில் ஒழுக்கத்தின் உயர்வு பற்றி, அரிது அரிது மானிடராதல் அரிது. மனிதப்பிறவி ஓர் அற்புதமானது. வாழ்க்கை என்பது குறுகிய பாதை அதைப் பயன்படுத்தி தாழ்வதோ உயர்வதோ நம் கையில் தான் உள்ளது. மனிதன் மனதில் பல நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. அவற்றுள் அறிவு (ஞானம்), உணர்ச்சி(இச்சை), செயல்(கிரியை) போன்றவை முதன்மையானவை. அதேபோன்று மனிதன் சமூக வாழ்வில் தத்தம் நிலைக்கேற்ப வாழும் முறையோ அல்லது ஒழுகும் முறையே ஒழுக்கம் ஆகும். கல்வி கற்பதும், பணம் சேர்ப்பதும் மட்டும் ஒருவனுக்கு உயர்வை தந்துவிட முடியாது. ஆனால் ஒருவன் வாழ்நாள் முழுவதும் பேசப்படுகின்றான் எனின் அவன் பின்பற்றிய ஒழுக்கத்தால் தான். அதாவது ஒருவன் உடல்விட்டு உயிர் பிரிந்தாலும் அவன் மதிக்கப்படுகின்றான் எனின் அவன் பின்பற்றிய ஒழுக்க தருமமே. அதனால் தான் திருவள்ளுவரும் ஒழுக்கம் உயர்வு தருமெனின் அது உயிரை விட ஓம்பப்படவேண்டும் என்றுதிருக்குறளில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஒழுக்கம் விழுப்பந் தரலான் – ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்'

–என்றும் வாழ்க்கையில் ஒழுக்கம் உறுதுணையாக இருக்கும். ஆதலால் அதனை கடைப்பிடிக்கவும் வேண்டும் என்றும் இக்குறள் மூலம்,

'பரிதோம்பிக் காக்க ஒழுக்கம்' – குறிப்பிடுகின்றார்.

கல்வித்தரத்தை மதிப்பீட்டாளர்கள் ஆராயும் பொழுது அவனது ஒழுக்க நிலை பற்றியும் கவனத்திற் கொள்கிறார்கள் என்பது நாம் அறிந்த உண்மை. எனவே தனியே ஒருவனது கல்வி, கேள்வி அறிவைக் கொண்டு அவன் ஒழுக்கமுடையவன் என்ற முடிவுக்கு வருதல் பொருந்தாது.

ஒருவன் கல்வி அறிவும் நல்லொழுக்கமும் உடையவனாக இருந்தால் அவனது சமூகமும் மேன்மையடையும். அதேநேரம் அவன் ஒழுக்க மற்றவன் ஆக வாழும்பொழுது அவனது பிறப்பும் இழிந்த பிறப்பாய் ஆகிவிடும்.

'ஒழுக்கம் உடைமை, குடிமை – இழுக்கம்
இழிந்த பிறப்பாகி விடும்'

– என்பது வள்ளுவர் கூற்றாகும்.

ஒருவன் நல்லொழுக்கமும் கல்வி அறிவும் உடையவனாக இருக்கும் பொழுது அவன் சமூகத்தில் நல்ல சேவை செய்வான். எனவே அவனை, மக்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தி வைப்பார்கள். அதேநேரம் ஒழுக்கமற்றவன் சமூகத்தில் சேவை செய்ய நினைத்தாலே பழிச்சொல் வந்து சேரும் வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். பலவிதமான மக்கட்பண்பு உடையவர்களோடு நாம் பழகும் வாய்ப்பு ஏற்படும்ட போது எமது ஒழுக்கத்தை பாதுகாப்பதில் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும். ஒழுக்கத்தில் சிறந்தவர் 'துறவறத்தார்' என்றும் எந்நூலும் கூறும். நீத்தார் என்பவர் 'இச்சைகளை நீக்கிய துறவி' என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இனி உண்மை பேசுதல், இன்சொல், அன்பு போன்ற பண்புகளை நாம் வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகின்றது. அதேநேரம் கோபம், பொறாமை, பேராசை போன்ற பண்புகளை நம்மிடத்திலிருந்து ஒதுக்க வேண்டும். அதனையே பாரதியார் 'பொய் சொல்லக் கூடாதடி – என்றும் புறம் சொல்லலாகாது பாப்பா' என்று பாடுகிறார்.

அன்றியும் உலக நடையறிந்து ஒழுகும் பண்பாடு நாம் கடைப்பிடிக்க வேண்டியதுள் முக்கியமானதாகக் கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வளவு கருத்தையும் திருவள்ளுவர் தனது திருக்குறளில் பதினான்காம் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார்'

– அதாவது விஞ்ஞான வளர்ச்சியினாலும் அறிவு வளர்ச்சியினாலும் பல்வேறு விதமான இன, மத மக்களுடன் சென்று பழகும் வாய்ப்பும் வசதியும் காணப்படுகின்ற இன்றைய உலகத்தோடு நாம் வாழப்பழகாவிட்டால் நாம் எவ்வளவு கற்றும் அதில் பயனில்லை.

இதற்காகத்தான் நாம் நல்ல பல நூல்களை தேடிக்கற்க வேண்டும் என்றும் கற்றதன் வழியில் நடக்க வேண்டும் என்று வள்ளுவர் முதல் பெரியோர்கள் வரை புத்திமதி சொல்லியிருக்கிறார்கள்.

'கற்கக் கசடற கற்பவை – கற் பின்
நிற்க அதற்குத் தக'

– என்று திருக்குறளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்ல பல சிறந்த நூல்களிற்கு நமது தமிழ் மொழியில் இலக்கியங்களும் மகாபாரதம், இராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற காவியங்களும் உதாரணங்கள் ஆகும். மகாபாரதத்தில் தருமனின் பொறுமையும் பாண்டவர்களின் பெருமையும் கூறப்பட்டுள்ளது. அதேபோல் இராமாயணத்தில் தந்தை சொல் மாறா இராமனையும் அவனது சகோதரப்பண்பினையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகவும் கற்புடையமங்கையரை தெய்வமெனப்போற்றுவதும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு வாழ்வியல் நோக்கில் நல்லறம் எனப்படும் ஒழுக்க நெறிகளினைப் பட்டறிவாகக் கொண்டு படைக்கப்பட்டவையே இலக்கியங்கள் ஆகும்.

எப்படியும் வாழலாம் என்று வாழலாம் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்வதே விழுபந்தரக்கூடியது என்று திருவள்ளுவர் திருக்குறளில் கூறுகிறார்.

இவ்வாறான ஒழுக்க நெறிச்சிந்தனைகளை கூறும் திருவள்ளுவர் கல்வியின் சிறப்புப்பற்றிக் கூற முன்வருவதாவது,

'கேடில் விழுச் செல்வம் கல்வி – ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை'

– என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். உலகில் இருவகையான செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச்செல்வம் மற்றையது பொருட்செல்வம். பொருட்செல்வம் நீராலும் நெருப்பாலும் அழியக் கூடியது. பிறரால் கவரக்கூடியது. ஆனால் கல்விச் செல்வம் அழிவற்றது. நீராலும் நெருப்பாலும் அழியமுடியாது. கள்வரால் களவாடமுடியாது. அதனால் தான் கல்விச்செல்வம் உயர்வான செல்வம். நமது முன்னோர் 'கல்விச் செல்வத்திற்கு நிகரான செல்வம் இவ்வுலகில் வேறொன்று இல்லை' என்று கூறினர்.

மணற்கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்று நீர் சுரந்து பெருகிக் கொண்டே செல்வது ஹிபுஜுல நாம் கற்குந் தோறும் அறிவு பெருகிக் கொண்ட செல்லும்.

'தொட்டனைத்தூறும்மணங்கேணி – மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு'

– இக்குறள் மூம் வள்ளுவர் அக்கருத்தை விளக்குகிறார்.

மனிதனில் உள்ள அறியாமையை நீக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி. கற்றவனுக்கு மட்டும் தான் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்றும் கற்றுத் தேர்ந்தவனே கண்ணுடையவன் என்று கருதப்படுவான்.

எல்லாவித அழகுகளிலும் கல்வி அழகே சிறந்த அழகாகும். எனவே அவ்வழகைப் பெறுவதற்கு நாம் சலியாது முயற்சிக்க வேண்டும். கல்வி கற்பதற்கு வயது எல்லை இல்லை. நாம் கல்வியை என்றும் கற்கலாம். ஆனால் பிழையறக் கற்க வேண்டும். பின்னர் கற்ற நெறியில் நடக்க வேண்டும். அதேபோன்று நாம் கற்ற கல்வியால் இன்பமடைந்தது போல் பிறருக்கும் அதனை கற்பிப்பதால் அவர்களும் நன்மையடைவதை கண்டு மகிழ்பவரே சான்றோர். அக்கருத்தை திருக்குறளில்,

'தாமின் புறுவ துலகின் புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்'

– இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று ஔவையார் அருளிய வாக்குண்டாம் என வழங்கப்படும் மூதுரையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'மன்னனும் மாசறக் கற்றோனும் – சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்'

– மன்னனிற்குத் தன்தேசமல்லால் சிறப்பில்லை – ஆனால் கற்றோனுக்குச் சென் இடமெல்லாம் சிறப்பு' அதாவது, அரசனையும் அறிஞனையும் ஒப்பிடுகையில் அறிஞனே சிறப்புடையவன். அரசனிற்கு தன் தேசம் அல்லாமல் வேறு நாடுகளில் சிறப்பில்லை. ஆனால் கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. அதாவது கல்வி எனும் அழகு அரசனை விடவும் அறிஞனையே சிறப்புடையவனாக மாற்றுகின்றது.

''ல்விக் கரையில கற்பவர் நாள் சில' எனும் பழமொழியில் குறிப்பிட்டபடி எல்லையில்லாத கல்வியை பெறும் காலம் மிகவும் குறைவு என்பதைப் ஹிபுஜுல மேலும் 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்பதில் நாம் கற்றது குறைவானது ஆனால் நாம் கற்காத விடயம் மிகவும் அழகானது. எனவே அத்தகைய கல்வி அழகை பெறுவதன் ஊடாக மனிதர்களாகிய நமது மனம் தூய்மையடைந்து அழகு பெறுகிறது.

நாலடியாரில் குறிப்பிட்டுள்ள விடயத்தின் அடிப்படையில் விளக்கப்படுவது, தலைமுடியின் அழகும் உடலை வளைத்து உடுக்கப்படும் ஆடையின் கரையழகும் மஞ்சள் பூச்சின் அழகும் மக்களிற்கு அழகு அல்ல.

நாம் நல்லவர் என்று தம் மனம் உண்மையாக உணரும் ஒழுக்கத்தை பயத்தலலால் கல்வியழகே மக்களிற்கு சிறந்த அழகாகக் காணப்படுகின்றது. அதாவது இக்கருத்து அப்பாடலடியில்,

'குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் எனும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு'

நாம், இவ்வாறான அழிவற்ற செல்வத்தை கற்பதன் ஊடாக இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ முயற்சிக்க வேண்டும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையிலும் தேவைப்படுகின்ற பண்புகளை பற்றிய பட்டறிவின் ஊடாக நாம் வாழ்வின் வெற்றிச் சாவியை அடைவதற்கு திருக்குறள் எனும் மாபெரும் நூல் உதவியாக உள்ளது.

விஞ்ஞான வளர்ச்சியால் வெறுவாகப் பாதிப்படைந்து வரும் இன்றைய மாணவர் சமுதாயத்தில் போதுமான அளவு ஒழுக்கத்தைப் பேணுவதற்கு போதுமான,

'எல்லாப்பொருளும் இதன்பால் உள: இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்'

– எனும் மதுரைத் தமிழ் நாகனார் திருக்குறள் பற்றிக் கூறுகிறார்.

எனவே திருக்குறள் என்ற வெண்பாவை மாணவர்கள் இளம்பராயத்திலிருந்து கற்று கற்றாங்கு வாழப் பயின்று கொள்ளுதல் பயனும் பண்புடைமையும் ஆகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# இணைப்பு சாத்தியமா?

## அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் பேச்சுவார்த்தை துவங்கி உள்ளார். இதன் மூலம் தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா, என்பது வேறு விடயம். அரசும் தமிழர் தரப்பும் மோதல் போக்கில் இல்லை என்று நிலைமை சீராவதே அதற்கான முதல் அடி.

எப்போது வடக்கு எம்பிக்களுடன் (மட்டும்) ஜனாதிபதி பேச்சு நடத்துவார் என்ற அறிவிப்பு வெளியானதோ, அப்போது இதனை தென்னிலங்கையின் பிரித்தாளும் சூட்சியின் ஒரு பக்கம் என்று தமிழர் தரப்பு முடிவு செய்து விட்டது. அந்த வகையில், வடக்குடன் சேர்ந்து, கிழக்கு மாகாணத்தின் தமிழ் எம்பிக்களும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சிகள் முடிவை அறிவித்துவிட்டன.

ஆனால், இதில் யார் முதலில் அந்த அழைப்பை விடுத்தனர், அல்லது யாருடைய அழுத்தங்களுக்கு ரணில் வழங்கினார் என்பது வெட்டி பேச்சு. மீண்டும் தமிழர் தரப்பினரை பிரித்துப்பார்க்கும் வேலையை இவர்களே செய்து விடுவார்கள். இல்லாமலே, கஜேந்திர குமார் பொன்னம்பலம் தரப்பினர் இந்த பேச்சுவார்த்தைகளை வழக்கம் போலவே புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். பின்னர் எதற்கு இந்த பிரித்தாளும் சூட்சி என்றெல்லாம் புருடா?

### மறக்கப்பட்டவர்

இரு மாகாணங்களையும் சேர்ந்த தமிழ் எம்பிக்கள் சேர்ந்தே பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று அறிக்கை வெளியிட்ட தமிழ் அரசியல் தலைவர்கள் ஒரு விடயத்தை, அல்லது ஒரு மனிதரை, தலை வரை மறந்து விட்டனர். இது குறித்து அறிக்கை வெளியிட்ட யாருமே, கிழக்கு எம்பிக்களும் பேச்சுவார்த்தையில் சேர்ந்து கொள்ளவில்லை என்றால், சமகாலத்தை சேர்ந்த மூத்த தலைவர் சம்மந்தன் அவற்றில் பங்கு பெற முடியாது, அல்லது வழி நடத்த முடியாது என்பதை சுட்டிக்காட்டவில்லை. அவரை மறந்து விட்டார்கள். அல்லது கண்டுகொள்ளவில்ஷ்லை.

இதில், சம்மந்தனின் சிஷ்யகோடியான சுமந்திரனும் அடக்கம். குறிப்பாக சுமந்திரன் உள்பட்ட சம்மந்தன் சார்ந்த தமிழரசு கட்சியின் தலைவர்கள் யாருமே, சம்மந்தனுக்கு அழைப்பு இல்லை என்றால், அந்த பேச்சுவார்த்தைகளில் தாங்களும் இடம் பெறமாட்டோம் என்று சாரப்படும்படி எதுவும் கூறியதாக தெரியவில்லை.

இது சம்மந்தன் என்ற தனி மனிதனை குறித்தது மட்டுமல்ல. பிற தமிழர் தலைவர்களை போலவே, அவரும் எதோ ஒரு விதத்தில் சுயநலவாதி தான். ஏன், தன்னை சுற்றியே தமிழர் அரசியல் சுழல வேண்டும் என்பதிலும் தெளிவாக இருந்து, அதனை அவ்வப்போது உறுதி செய்து கொண்டவர் தான்.

ஆனால், இன்றளவும் அவர் அளவிற்கு இன அரசியல் குறித்த ஆழ்ந்த ஞானம் பெற்ற தமிழ் தலைவர்கள் யாரும் இல்லை. அதிலும் குறிப்பாக, எடுத்ததற்கெல்லாம், இந்திய மாடல் என்றோ, ஐரோப்பிய மாடல் என்றோ குறிப்பிடாமல், இலங்கையின் சூழலுக்கு ஏற்ப அரசியல் தீர்வு அமைய வேண்டும், அமைய முடியும் என்ற நிதர்சன உண்மையை புரிந்து கொண்டவர். அதன் படி செயலாற்றுபவர்.

### மாற்று திட்டம்

இது இவ்வாறென்றாலும், வடக்கு, கிழக்கு எம்பிக்கள் ஒரு சேர பேச்சுவார்த்தையில் பங்கு பெற வேண்டும் என்ற வாதம் அரசியல் தீர்வு குறித்த நீக்கங்களுக்கு எவ்வாறு பொருந்தும், என்பது குறித்து தமிழர் தரப்பு தீர்க்கமாக ஆலோசித்ததாக தெரியவில்லை. அவ்வாறு இல்லை என்றால், அதற்கான மாற்று யோசனைகளும் அவர்கள் கையில் இல்லை.

இரு மாகாண எம்பிக்களும் சேர்ந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று கூறும் தமிழ் அரசியல்வாதிகள், தங்களது நிறைவேறாக கோரிக்கையான வட – கிழக்கு இணைப்பு திட்டத்தை மனதில் வைத்தே பேசுகிறார்கள். கோரிக்கை என்ற வடிவில் அது நியாயமான அணுகுமுறையும் கூட.

இனப்பிரச்னைக்கான பதிமூன்றாவது திருத்தம் அடிப்படையிலான தீர்வு திட்டம் என்று கூறும் போது, வடகிழக்கு இணைப்பு பலத்த அடி வாங்கியது. பொலிஸ் அதிகாரம் போன்ற பதிமூன்றாவது திருத்தத்தால் உறுதி செய்யப்பட்ட எந்த ஒரு அதிகாரமும் மாகாணங்களுக்கு, குறிப்பாக தமிழர் தரப்புகளுக்கு கிடைக்கவில்லை.

என்றாலும், அதன் ஒரு பகுதியான வடக்கு,கிழக்கு இணைப்பை மட்டும் அன்றைய ஜெயவர்தனே அரசு உடனடியாக செயல்படுத்தியது. பின்னர், மீணடும் துவங்கிய இனப்போர் காரணமாக, இணைப்பிற்கான கிழக்கு மாகாணத்தில் நடைபெற வேண்டிய பொதுஜன வாக்கெடுப்பை முன்னெடுக்கப்பட முடியாமல் போனது. இதற்கு காரணம்,

இடைப்பட்ட காலத்தில், வரதராஜ பெருமாள் ஒருவர் மட்டுமே, இணைந்த வட – கிழக்கு மாகாணத்தின் ஒரே முதல்வர் என்ற சிறப்பை தட்டிக்கொண்டு சென்றார். அவரும் அதிக நாள் தாக்கு பிடிக்கவில்லை. இவை அனைத்திற்கும் காரணம், தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அல்ல. மாறாக, தமிழர் நலன் காக்கும் போர்படை என்று மார்தட்டிக் கொண்டிருந்த விடுதலை புலிகள் அமைப்பு தான்.

என்றாலும் இணைப்பை தொடர்ந்து செயல்படுத்தும் விதமாகவே, அடுத்தடுத்து வந்த ஜனாதிபதிகளும் கூட அதற்கு அடிப்படையான கிழக்கு மாகாண பொதுஜன வாக்கெடுப்பை கேள்வி இல்லாமல் ஆண்டாண்டிற்கும் தள்ளிப்போட்டு வந்தனர். கடந்த 2005 இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சா பதவியில் அமர்ந்த அடுத்த ஆண்டே, இரு மாகாண இணைப்பை நாட்டின் உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

அதற்கு நீதிபதிகள் முன் வைத்த காரணங்களில் நியாயம் இருந்தது. தமிழர் தரப்போ, வழக்கம் போல, சிங்கள பேரினவாதம் என்று முத்திரை குத்தினர்.

### குறைந்தபட்ச அவசரம்

நீதிபதிகள் சுட்டிக் காட்டியது போல், இரு மாகாண இணைப்பிற்கு முன்னர் விடுதலை புலிகள் அமைப்பு தங்களது ஆயுதங்களை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது முன் நிபந்தனை. இதற்கு, அவர்கள் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தையும், ஏன் இணைப்பிற்கு வழிசெய்த மாகாண சபை சட்டத்தையும் சாட்சிக்கு அழைத்தனர்.

இதனையே விரும்பிய மஹிந்த அரசு, உடனடியாகவே, இரு மாகாண இணைப்பை ரத்து செய்தது. அதனை தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நிர்வாக முடிவுகளையும் உடனடியாகவே செயல்படுத்தியது. ஆனால், பதிமூன்றால் அளிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரபகிர்வு அம்சங்களையும் செயல்படுத்துவதில் அந்த அரசும் சரி, பின்னர் பதவிக்கு வந்த அரசுகளும் சரி, குறைந்தபட்ச அவசரம் கூட காட்டவில்லை.

இரண்டு மாகாணத்தின் தமிழ் எம்பிக்களும் ஒரு சேர அரச தலைவரை சந்திக்கும் போது, இணைப்பு குறித்த கேள்விகள் எழும். அந்த கேள்விகளை அரச தரப்போ முன்வைக்கும். காரணம், மொத்த அரசியல் தீர்வு குறித்த முடிவுகள் எட்டப்படும் காலகட்டத்தில், இதற்கான முடிவும் எட்டப்பட்டிருக்க வேண்டும். அல்லது, அதுவே, அவர்கள் முன்வைக்கும் நியாயமாக இருக்கும்.

அந்த விதத்தில், இரு மாகாண தமிழ் எம்பிக்களின் கூட்டு பேச்சுவார்த்தை குறித்த கோரிக்கை எப்போது எழுந்ததோ, அப்போதே இந்த ஒரு புள்ளியில் அரசு, தீர்வு திட்டம் குறித்த முடிவுகளை மேலும் தள்ளிப்போடுவதற்கான நியாயத்தை அவர்களே தங்களை அறியாமலே உருவாக்கி விட்டார்கள்.

### நிதர்சனமான உண்மை

இரு மாகாண இணைப்பு குறித்து இன்று வரை முன் வைக்கப்பட்டுள்ள பல்வேறு கருத்துக்களில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் முன்வைத்த தீர்வே, ஏற்புடைய திட்டம். அதாவது, வட மாகாணம் மற்றும் கிழக்கே உள்ள தமிழர் பகுதிகளின் இணைப்பு மட்டுமே சாத்தியமான விடயம் என்பது அவரது கருத்து. அதுவே நிதர்சனமான உண்மையும் கூட.

இதன் படி, கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் அதிக எண்ணிக்கையில் வாழும் அம்பாறை மாவட்டம், அடுத்துள்ள உவா மாகாணத்துடன் இணைக்கப்படும். என்றாலும், கிழக்கு மாகாணத்தில் பெருவாரியாக வாழும் முஸ்லிம் மக்களின் நிலைப்பாடு, ஆதரவு மற்றும் முடிவு, வட – கிழக்கு மீள் இணைப்பிற்கு கிடைப்பது அசாத்தியமே.

குறிப்பாக, கடந்த சில தசாம்சங்களாக முஸ்லீம் இளைஞர்களிடையே தோன்றியுள்ள இன அரசியல், முந்தைய தலைமுறையினரின் இணக்கப்பாடு அரசியலுக்கு முடிவு கட்டிவிட்டது. இல்லை என்று சொல்லாது, மஹிந்த அரசால் நியமி;க்கப்பட்ட திசா விதரண குழு, வடக்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் உள்ள முஸ்லீம் மக்களுக்காக ஒரு தனி அரசமைப்பை உருவாக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது.

அது நியாயமாகப்பட்டாலும் அதனை சம காலத்தில் எவ்வாறு செயல்படுத்த முடியும் என்பது குறித்து ஆராய்ந்து அறிவது முக்கியம். அதை விட மிக முக்கியம். சம கால முஸ்லீம் தரப்புகளுக்கு இந்தியாவில் உள்ள புதுச்சேரி போன்ற ஒரு மாகாணம் மற்றும் அரசமைப்பு, எந்த அளவிற்கு ஏற்புடையது என்பதும் கண்டறியப்பட வேண்டும்.

புதுச்சேரிக்கு மாற்றாக, முஸ்லிம் அரசியல் தலைமைகள், இந்தியாவின் வடகிழக்கு பகுதியிலும் உலகின் பிற பகுதிகளிலும் செயல்பாட்டில் இருக்கும் வேறு பல தீர்வு திட்டங்களையும் ஆராயலாம். இல்லை என்றால், தங்கள் மக்களின் மனநிலையை தெரிந்து கொண்டு, தமிழர் பெரும்பான்மை உள்ள மீளிணைந்த வடகிழக்கு மாகாணத்திலேயே தொடரலாம்.

### தென்னிலங்கை ஆதரவு

இவற்றிறக்கு அப்பால், தென்னிலங்கை அரசியல் மற்றும் சமூக தலைமைகள் இது போன்ற தீர்வு திட்டத்தை ஆதரிப்பார்களா என்பதும் தெரியவில்லை. குறிப்பாக, 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஜே.வி.பி. தொடர்ந்த வழக்கின் அடிப்படையிலேயே அமைந்தது. தற்போது அறகலயா போராட்டத்திற்கு பின்னர், தென்னிலங்கையில் ஜே.வி.பிக்கு அதிக அளவில் ஆதரவு இருப்பதாக கருதப்படுகிறது. எனவே, மீளிணைப்பு குறித்து அவர்களது கருத்து முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு முக்கியத்துவம் பெறுகிறது.

அதை விட முக்கியம், இப்போதுள்ள கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்கள், இந்த மீள் இணைப்பு கோரிக்கையில் எந்த அளவிற்கு ஆர்வம் காட்டுகிறார்கள்? ஆதரவு காட்டுகிறார்கள்? அதுவும் கண்டறியப்பட வேண்டிய விடயமே.


Malaysia Tour
5 DAYS 4 NIGHTS
SOLD OUT
Next Tour
June 30
INCLUSION
» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return Air Ticket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour
LKR 148,000.00
For Early Booking
Travel Date: 19 - 23 May 2023
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 28 வியாழக்கிழமை 11.05.2023 கதிர் 55

## கம்பளையில் யுவதி மாயம் பொலிஸார் தீவிர தேடுதல்



வீட்டைவிட்டுவெளியேறி பணியிடத்துக்குச்சென்றயுவதி ஒருவர் கடந்த ஐந்து நாட்களாகக்காணாமல்போயுள்ளார் என்றுகம்பளைப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளை, வெலிகல்ல, எல்பிட்டிய மற்றும் மகாவலி ஆற்றின் கரையோரப் பகுதிகள் உள்ளிட்ட வனப்பகுதிகளில் யுவதியைத் தேடும் நடவடிக்கையை கிராமமக்களும் கம்பளைப்

2

# பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க சர்வதேச பொறிமுறையே வேண்டும்

## உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சபையில் சுமந்திரன் எம்.பி. உரை



உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது (வீயூளீ) சர்வதேச பொறிமுறையாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் குழு அமைப்பதில் பயன் இல்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர், 2009 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில்தான் மிக மோசமான படுகொலைகள் அரசால் அரங்கேற்றப்பட்டன. எனவும் சுட்டிக்காட்டினார்.

இன்றைக்கும் சர்வதேச நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கு, நாங்கள் சர்வதேசம் செல்லத் தயாரில்லை எனவும், உள்நாட்டு பொறிமுறைக்கமைய விடைகொடுப்போம்எனவும்கூறிவரும் அரசு, இன்னும் ஒரு விடையையும் கொடுக்காமல் உள்ளது. ஆனால், இழப்பீட்டுக்காக வெளிநாட்டு நீதிமன்றத்துக்குச் செல்கின்றது. இது உங்களுடைய (ஆட்சியாளர்களின்) இனவாத முகத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியை இன்று சந்திக்கின்றோம். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றியும் கலந்துரையாடப்படும். அமைக்கப்படும் ஆணைக்குழு என்பது சர்வதேசப் பொறிமுறையாக இருந்தால் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும்எனஎடுத்துரைக்கவுள்ளோம். அவ்வாறு இல்லாவிட்டால் அதில் பயன் இருக்காது - என்றும் சுமந்திரன் மேலும் கூறினார். (02)

## வவுனியாவில் காணாமல்போன இரு மாணவரும் அ'புரத்தில் மீட்பு

வவுனியா, செட்டிகுளம் – மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள குருமடம் ஒன்றில் தங்கி கல்வி கற்று வந்த மன்னார் – முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் காணாமல்போன நிலையில் அனுராதபுரத்தில் மீட்கப்பட்டுள்ளனர்.

செட்டிக்குளம் – மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வரும் குறித்த இரு மாணவர்களும் சைக்கிளில் பாடசாலைக்குச் சென்று வருவது வழமை.

கடந்த திங்கட்கிழமை பழுதடைந்த சைக்கிளுக்கு டயர் வேண்டுவதற்காகச் சென்றவர்கள் நீண்ட நேரமாகியும் விடுதி திரும்பவில்லை.

அதன் பின்னர் இரவு 8 மணியளவில் குறித்த விடுதியின் காப்பாளர், காணாமல் போன மாணவர்களின் பெற்றோருக்குத் தொடர்பு எடுத்து அவர்கள் வீட்டுக்கு வந்தார்களா என்று கேட்டுள்ளனர்.

குறித்த பெற்றோர் ஏதேனும் பிரச்சினையா என்று கேட்டபோது விடுதி காப்பாளர்களால் மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக விடுதி பங்குத் தந்தையர்களால் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன் சமூக வலைத்தளங்களிலும் இரு மாணவர்களினதும் புகைப்படங்களும் பகிரப்பட்டன.

இந்நிலையில் இரண்டு நாட்களின் பின்னர் நேற்றுப் புதன்கிழமை 2 மாணவர்களும் அனுராதபுரம் பகுதியில் மீட்கப்பட்டுள்ளனர். எனினும், இவர்களை யாரேனும் கடத்திச் சென்றார்களா அல்லது அவர்களவே சென்றனரா என்பதை அறிவதற் கான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (100)

## காணி கட்டளைச் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்பு



நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு தகுதியான குழுவொன்றினை நியமிக்குமாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கினார்.

காணி முகாமைத்துவம் தொடர்பிலானநிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சரத்துக்களை திருத்துவது உள்ளீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலணித்துவ ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட காணிச் சட்டங்களே இன்றும் நடைமுறையில்உள்ளதுஎன்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, காணி பயன்பாடுகள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள் நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொறுத்தமற்றதாக காணப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு காணிகளைப் பெற்றுக்கொடுப்பதில் காணப்படுகின்ற சிக்கல்களை நீக்கி புதிய தேசிய காணிக் கொள்கை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் இங்கு தீர்க்கமாக ஆராயப்பட்டது. அதற்காகக் காணிஆணைக்குழுவின்ஊடாக மாகாண சபை காணிகள் தொடர்பிலானபிரச்சினைகளை நிவர்த்திக்குமாறும், கிராம சேவகர் பிரிவுகள்

2

## எக்ஸ்பிரஸ் பேர்ள் சட்ட விவகாரத்தை கையில் எடுத்தது ஐக்கிய மக்கள் சக்தி

### நாடாளுமன்றில் இன்று சஜித் அறிவிப்பு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கையின் சுற்றுச்சூழலுக்குஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீடு கேட்டு அந்தக் கப்பல் நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் இன்று இதனை அறிவித்தார்.

கப்பல்நிறுவனத்திடம் இருந்து இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைக்கும் வகையில் தமது கட்சி இந்தச் சட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் சஜித் தெரிவித்தார்.

கப்பலால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புத் தொடர்பில்இழப்பீட்டைப் பெறுவதற்கான முதல் நடவடிக்கையாகஇதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு முன்னறிவித்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பான சட்ட முன்னெடுப்புக்களின்போது, தம்மால் தரப்படும் இழப்பீட்டுத் தொகை திறைசேரியில் தனியான கணக்கில் வைப்பிலிடப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும் அது தொடர்பான அமைப்புக்களுக்கும் மட்டுமே வழங்கப்படவேண்டும் என்று கப்பல் நிறுவனத்தின் சார்பில் நிபந்தனை முன்வைக்கப்பட்டதாகவும் சஜித் தெரிவித்தார். .

''எமது மக்களைப் பணத்திற்கு இரையாக்கிவிடலாம் என்று கப்பல் நிறுவனம் நினைத்தால் அது தவறு. நாம் யாரும் பணத்திற்கு அடிமையானவர்கள் அல்லர். நாம் வங்குரோத்து நிலையை அடைந்தாலும், நிதி நெருக்கடி ஏற்பட்டாலும், எமதுநாட்டை அழிக்கவோ, காட்டிக்கொடுக்கவோ, பலிக்கடாவாக்கவோ வாய்ப்பளிக்கமாட்டோம்" எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். எதிர்க்கட்சியின் சட்ட நடவடிக்கையின்கீழ் 2சிங்கப்பூர்நிறுவனங்கள், 2பிரிட்டன்நிறுவனங்கள், 2இலங்கை நிறுவனங்கள் மற்றும் ஜப்பான் நிறுவனம் ஒன்று என 7 நிறுவனங்களுக்கு முன்னறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வெடுக்குநாறிமலை ஆலயப் பூசகர் உட்பட இருவர் கைதாகி விடுதலை

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதிலிங்க ஆலயத்தின் பூகசர் மற்றும் ஆலய நிர்வாக உறுப்பினர் ஒருவர் என இருவர் நெடுங்கேணிப் பொலிஸாரால் இன்று காலை கைது செய்யப்பட்டனர். நீதிமன்ற உத்தரவை மீறி தொல் பொருட்களுக்குச் சேதம் விளைவித்தனர் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இந்தப் பிரச்சினையில் சந் தேகநபர்கள் இருவரும் ஏற்கனவே வழக்காளிகளாக இருப்பதானால் அவர்களை அதே வழக்கில் சந்தேகநபர்களாக்க முடியாது என்று நீதிமன்றத்திற்குச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

வெடுக்குநாறிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இறை விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விக்கிரகங்கள் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து ஆலயத்தில் பூஜை நிகழ்வுகள் தொடர்ச்சி யாக இடம்பெற்று வந்ததுடன் நேற்று சங்காபிகே

2

## கைதை எதிர்த்து இன்று உடன் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வெடுக்குநாறி மலை ஆதிலிங்க ஆலயத்தின் பூசகர் மற்றும் நிர்வாக உறுப்பினரின் கைதைக் கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இன்றுவவுனியாவில்ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை சுற்று வட்ட வீதியில் இன்று மதியம் இந்த ஆர்ப்பாட்டம்இடம்பெற்றது.

ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'தமிழர்களின்தொன்மையை அழிக்காதே,வெடுக்குநாறி எங்கள் சொத்து", "தொல்லியல் திணைக்களம் அரசின் கைக்கூலி'', "நீதியில்லா நாட்டில் நீதிமன்றம் எதற்கு", "கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். சுமார் 30 நிமிடம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (100)



# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட 15 ஆயிரத்து 32 மீனவர்களுக்கு நட்டஈடு கிடைத்தது!

## அமைச்சர் காஞ்சன தகவல்

எம்.வி.எக்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் கடல் வளங்களுக்கும், கடற்கரையோரங்களுக்கும் ஏற்பட்ட மாசடைவைக் குறுகிய காலத்துக்குள் தூய்மைப்படுத்தினோம்.

கம்பஹா,கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் நேரடியாக பாதிக்கப்பட்ட 15 ஆயிரத்து 32 மீனவர்களுக்கு மொத்தமாக 300 கோடி ரூபா வரை நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியதாவது–

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து இடம்பெற்ற காலப்பகுதியில் நான் கடற்றொழில் வளங்கள் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்தேன். இதன்போது மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் கடற்றொழில் வளங்கள் அமைச்சு ஊடாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளானஎம்.வி.எக்ஸ்பிரஸ்பேர்ள்கப்பல் தொடர்பில் பல்வேறு தரப்பினர் பொறுப்பற்றவகையில்தெரிவித்தகருத்துக்கள் நட்டஈடுபெற்றுக்கொள்ளும்நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு எங்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதை 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானிக்க முடியாது.

துறைசார் நிபுணர்கள் சமர்ப்பித்த அறிக்கையைஅடிப்படையாகக்கொண்டு சட்ட ஆலோசனைகளுக்கு அமைய சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த கப்பல் விபத்து தேசிய பிரச்சினையாகக் கருதப்படுகிறது. ஆகவே, இந்த விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன்செயற்பட்டுள்ளதுஎன்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

இந்த கப்பல் விபத்து விவகாரத்தில் ஒரு துறை மாத்திரம் தனித்து செயற்பட முடியாது.நீதியமைச்சின்தலைமைத்துவத்தில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகள்உட்படசகலதரப்புக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டன.



## வெடுக்குநாறி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு இடம்பெற்றது. அதில் மழையையும் பொருட்படுத்தாமல் பக்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, விசாரணை ஒன்றுக் காக ஆலய நிர்வாகத்தினரைப் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு நெடுங்கேணிப் பொலிஸாரால் நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து ஆலயத்தின் பூசாரி மற்றும் நிர்வாக உறுப்பினர் உட்பட இருவர் இன்று காலை நெடுங்கேணிப் பொலிஸ் நிலை யத்துக்குச் சென்றனர். அவர்களி டம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

மலையில் விக்கிரகங்களை மீண்டும் பிரதிஸ்டை செய்தபோது நீதிமன்ற உத் தரவு கருத் தில் கொள்ளப்படாது தொல் பொருட்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாக அவர்கள் இருவர் மீதும் நெடுங்கேணி பொலி ஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந் தது.

கைதுசெய்யப்பட்டவர்கள் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். எனினும், குறித்த வழக்கின் முறைப்பாட்டாளர்களாக ஆலய நிர்வாகமும் பூசாரியும் இருப்பதனால் அதே வழக்கில் அவர்களை சந்தேகநபர்களாகபெயரிடுவதுவழக்கிற்கு முரணாக அமையும் என்பதை மன்றுக்கு சுட்டிக்காட்டினர் சட்டத்தர ணிகள். எனவே அவர்களை வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு மன்றிடம் கோரினர்.

பொலிஸார் மற்றும் சட்டத்தரணிக ளின் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்திய மன்று கைது செய்யப்பட்ட இருவரையும் வழக்கிலிருந்து விடுவித்தது.

அத்துடன், ஆலயத்தில் கட்டு மானங்களையோ மாற்றங்க ளையோ ஏற்படுத்தக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுக்கப் பட்டது. ஆலயத்தில் பூசை வழிபாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை இறை விக்கி ரகங்களை உடைத்தவர்களை கைதுசெய்வதற்கான நடவ டிக்கையினை விரைந்து எடுக்குமாறும் நீதிமன்றம் பொலிஸாருக்கு மீண்டும் பணித்தது.

## கம்பளையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரும்ஆரம்பித்துள்ளனர்.எல்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த பாத்திமா முனவ்வரா என்ற யுவதியே காணாமல்போயுள்ளார்.

அவர் கெலிஓயாவில் உள்ள மருந் தகம் ஒன்றில் பணியாற்றினார் என்று அவரது சகோதரர் மொஹமட் இம்ரான் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலைக்குச் செல்வதற்காகக் குறித்த யுவதி வீட்டை விட்டு வெளியேறினார் என்று பாத்திமாவின் தாயார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

வீட்டை விட்டுச் செல்லும் போது பஸ் கட்டணமாக நூறு ரூபா கேட்டார் என்றும், யார் மீதும் தங்களுக்கு எந்தப் பகையும் இல்லை என்றும் தாயார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (02)

## காணி கட்டளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டத்தில் காணப்படுகின்ற காணி உரிமையாளர்களின்விபரம்மற்றும்பயன்படுத்தப்பட்டுள்ள காணிகள்மற்றும்பயன்படுத்தப்படாதநிலையில் காணப்படுகின்ற காணிகள் தொடர்பில் கண்டறிந்து பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அறிக்கையொன்றைத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அரசின் தேவைகளுக்காகக் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற காணிகளை உரிமையாளர்களுக்கு மீளக் கையளிக்கும் பணிகளை ஆரம்பிக்குமாறும், எதிர்காலத்தில் அரசின் தேவைகளுக்காகக் காணிகளை கையகப்படுத்தும் போது சந்தைப் பெறுமதியைச் செலுத்தி அவற்றை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இதன்போதுநிலஅளவைத்திணைக்களம் மற்றும் விலை மதிப்பீட்டுத் திணைக்களங்களில் காணப்படும் தாமதங்களை நிவர்திப்பதற் காக அவற்றின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் கே.டி.என். ரஞ்சித் அசோக, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பி.ஹேரத் வனவளம் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.சீ.எம்.ஹேரத், நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் யூ.டி.சி.ஜயலால், பெருந்தோட்டைத்தொழில் அமைச்சின் செயலாளர் பீ.எல்.ஏ.ஜே.தர்மகீர்த்தி ஆகியோர் உட்பட அரச அதிகாரிகள் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க மற்றும் தென்மாகாண பிரதான செயலாளர், வட மத்திய மாகாண பிரதான செயலாளர் ஆகியோர் வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இந்தக் கலந்துரையாடலில் இணைந்துகொண்டார்கள். (02)

# முஸ்லிம், மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயவும் ஜனாதிபதி அழைப்பார்

## ஹரீஸ் எம்.பியுடனான சந்திப்பில் ஜனாதிபதி செயலாளர் உறுதியளிப்பு

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் நடைபெறும் பேச்சு தொடர் போன்று முஸ்லிம் கட்சிகளுக்கும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுக்கும், மலையக மக்களின் பிரச்சினைகளை ஆராய மலையக மக்கள் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்குமான பேச்சுக்கான சந்திப்பை ஏற்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுடனான சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார்.

அந்த சந்திப்பின் போது, வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிங்களின் பிரச்சினைகள், முஸ்லிங்களின் வகிபாகங்கள் முஸ்லிங்கள் தொடர்ந்தும் எதிர்நோக்கும் முரண்பாடுகள் தொடர்பில் தீர்வை எட்டும் விதமாக ஜனாதிபதியுடன் முஸ்லிம் தரப்பு



பேச்சு செய்யவேண்டிய அவசியத்தையும், மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு மலையக மக்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு செய்யவேண்டிய அவசியத்தையும் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்த பேச்சு தொடர்களை நீண்டகால தீர்வாக முன்வைக்கும் விதமாக இதய சுத்தியுடன் ஜனாதிபதி முன்னெடுத்து வருகிறார் எனவும், தமிழ், முஸ்லிம், மலையக சமூகங்களின் அடிப்படை பிரச்சினைகள், இனப்பிரச்சினைகளுக்கான தீர்வை அர்த்தபுஷ்டி மிக்க தீர்வை காணவேண்டும் என்ற முனைப்பில் இந்த பேச்சுத் தொடர்களை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார் என இதன்போது தனக்கு பதிலளித்த ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

தொடர்ந்தும், தமிழர்களின் பிரச்சினை தனித்துவமானது, முஸ்லிங்களின் பிரச்சினைகள் தனித்துவமானவை, மலையக மக்களின் பிரச்சினைகள் தனித்துவமானவை என்ற அடிப்படையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி ஆராய அவர்களை அழைத்துள்ளார்.

இதே போன்று முஸ்லிங்களின் பிரச்சினைகளை ஆராய முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளையும், முஸ்லிம் கட்சிகளையும் அழைத்து பேச்சு நடத்துவது என்று ஜனாதிபதி தீர்மானித்துள்ளதுடன் மலையக மக்களின் பிரச்சினைகளை மலையகத் தலைவர்களுடன் பேச ஜனாதிபதி ஆயத்தமாக உள்ளார்.

இந்த பேச்சுகளின் இறுதி வடிவமாக சகல தரப்பினரையும் ஒரே மேசைக்கு அழைத்து இறுதிப்பேச்சு நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இந்த பேச்சுகளில் காணி ஆணைக்குழு அமைத்தல், இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுதல் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்பட உள்ளன எனவும், கூடிய விரைவில் ஜனாதிபதிக்கும் முஸ்லிம் தரப்பு எம்.பிக்களுமிடையிலான பேச்சு அழைப்பை ஜனாதிபதி செயலகம் விடுக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க தனக்கு உறுதியளித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் மேலும் தெரிவித்தார்.

# டெங்குத் தாக்கத்தை கட்டுக்குள்கொண்டுவர சுகாதாரப் பிரிவினர்களுக்கு அநுராதா பணிப்பு





டெங்கு நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக முன்னெடுக்கவேண்டுமெனகிழக்கு மாகாண அதிகாரிகளுக்கும், சுகாதாரத் தரப்பினர்களுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு – 3 வைரஸ் பிறழ்வின் தாக்கம் மிக வேகமாக அதிகரித்து வருகின்றதையடுத்து, இதனைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த பணிப்புரைக்கமைவாக, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

'டெங்கு – 3' வைரஸ் பிறழ்வின் தாக்கம் மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் அதே வேளை, அதற்கான விழிப்புணர்வுகளையும் பொதுமக்களுக்கு நாம் வழங்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது.

இந்தஅபாயஎண்ணிக்கையிலிருந்து எமது மக்களினதும், நாட்டினதும் பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்திக்கொள்வதற் கான சகல செயற்றிட்டங்களையும், முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும்.

இதனைக் கருத்திற்கொண்டு நாம் அனைவரும் ஒன்றிணைந்து டெங்கு – 3 பிறழ்வின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து செயற்படுமாறு அனைத்து அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்னாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முதளிதரன், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்து பண்டா, கல்வி அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக, கிழக்கு மாகாண தொற்று நோயியல் பிரிவின் விடே வைத்திய நிபுணர் வைத்தியர் எஸ்.அருள்குமரன், சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள், பாதுகாப்புப் பிரிவினர் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு தங்களின் கருத்துக்களை முன்வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண வாழைப்பழத்துக்கு சர்வதேச சந்தைகளில் கிராக்கி!

## அமைச்சர் டக்ளஸ் பாராட்டு

கிடைக்கின்றவாய்ப்புக்களைசரியானமுறையில் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச சந்தைகளுக்கு எடுத்துச் செல்லுகின்றபோது, எமது மக்களின் பொருளாதாரத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம்–புத்தூரில் அமைக்கப் பட்டுள்ள, வாழைப்பழ ஏற்றுமதி தொழிற்சாலையை அண்மையில் பார்வையிட்ட போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதியுதவியில் விவசாய செயற்பாடுகளை நவீனமயப்படுத்தும் திட்டத்தின்கீழ்அமைக்கப்பட்டுள்ளதொழிற்சாலையில் பதனிடப்படுகின்ற கதலி வாழைப்பழங்கள் டுபாய் போன்றநாடுகளுக்குஏற்றுமதிசெய்வதற்குமுதற்கட்டமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் சுமார் 250 விவசாயிகள் நேரடியாக பயனடைந்துள்ளதுடன் கதலி வாழைப்பழத்துக்கு நியாயமான விலையையும் யாழ்ப்பாணவிவசாயிகள்பெறத்தொடங்கியுள்ளனர்.

எதிர்வரும் மாதங்களில் மேலும் ஏற்றுமதியை விரிவாக்கி நேரடியாகப் பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கையை 700 ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் மாதங்களில் வாரத்திற்கு 22 ஆயிரம் கிலோ கதலி வாழைப்பழம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகின்ற தாகவும் தெரிவித்துள்ளார்.



# தமிழர் பிரச்சினையை ரணிலால் தீர்க்க முடியவில்லையெனில் வேறு எந்த தலைவர்களாலும் என்றைக்கும் தீர்க்கமுடியாது!

## சாமர சம்பத் இப்படிக் கருத்து



தமிழ் மக்களின் பிரச்சினையை ரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ள முடியவில்லை என்றால் இந்த நாடளுமன்றத்தில் வேறு எந்த தலைவருடனும் தீர்த்துக்கொள்ள முடியாது. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி வழங்கி இருக்கும் சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கைக் கடலில் விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நஷ்ட ஈடு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

வடக்கு கிழக்கு மக்களுக்குக் குறைந்த பட்ச நியாயத்தையாவது வழங்கியது ரணில் விக்ரமசிங்க ஆவார். அவர் வடக்கு மக்களுக்கு நியாயத்தை வழங்கியதாலே தேர்தல்களின் போது தெற்கு சிங்கள மக்கள் அவரைத் தோற்கடித்தார்கள். வடக்கு மக்களுக்கு சலுகைகளை வழங்கிதாலே ரணில் விக்ரமசிங்க 2005 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தார்.

அதனால் தமிழ் மக்களின் பிரச்சினையை ரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடி தீர்த்துக்கொள்ள முடியவில்லை என்றால் இந்த நாடாளுமன்றத்தில் வேறு எந்த தலைவருடனும் பேசித் தீர்த்துக்கொள்ள முடியாது.

தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கிறது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதேபோன்று சிங்கள மக்களுக்கும் பிரச்சினை இருக்கிறது. வடக்கு மக்களின் பிச்சினையை ஜனாதிபதியுடன் கலந்துரையாடித் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தற்போது சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

ஜனாதிபதி அவர்களுக்கு இரண்டு தினங்கள் வழங்கி இருக்கிறார். இதனைப் பயன்படுத்திக்கொண்டு, அவர்கள் தங்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை ஜனாதிபதியிடம் தெரிவித்து தீர்த்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் தொடர்ந்து இனவாதம் பேசுவதால் எமக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை. சிங்களவர்களும் வடக்கில் உள்ளவர்களும் இனவாதத்தை அணைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் இனவாதத்தால் எதனையும் சாதிக்க முடியாது என்பதை தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்புகிறது. அதேபோன்று தெற்கில் இருப்பவர்களும் உணர்ந்திருக்கின்றனர்.

எனவே வடக்கு மக்களுக்கு குறைந்தபட்சமேனும்நன்மைசெய்திருப்பவர்ரணில்விக்ரமசிங்கஆவார். அவரின்தலைமைத்துவத்தில்தமிழ் மக்களின் பிச்சினையை முடியுமானளவு தீர்த்துக்கொள்ள தமிழ் கட்சிகள் முயற்சித்துக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதிதமிழ்த்தேசியககூட்டமைப்புக்கு வழங்கி இருக்கும் சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ரணில் விக்ரமசிங்கவால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குதீர்வைப்பெற்றுக்கொள்ள முடியாவிட்டால் இந்த நாடாளுமன்றத்தில் வேறு எந்த தலைவரினாலும் தமிழ் மக்களின் பிச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொள்ள முடியாது. – என்றார்.

# வடக்கில் அரச காணிகளை அபகரிக்கும் இராணுவத்தினரின் முயற்சிகள் அம்பலம்!



முல்லைத்தீவு மாவட்டத்தில், இரண்டு பிரஜைகளுக்கு ஒரு சிப்பாய் வீதம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை சட்டபூர்வமாக உரிமையாக்கும் இராணுவத்தின் முயற்சி அம்பலமாகியுள்ளது.

அரசின் மற்றொரு திணைக்களத்திற்கு அவசியமான காணியையே இவ்வாறு கையகப்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது, முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கீழ் 64ஆவது பிரிவு ஸ்தாபிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான 25 ஏக்கர் காணியை இராணுவத்தினர் உத்தியோகபூர்வமாக சுவீகரிக்கும் முயற்சியை மேற்கொண்டனர் என உள்ளூர் ஊடகவியலாளர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வார இறுதியில் ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான கே. காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பி.ஜெயராணி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினர் உட்பட பல பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அந்தச் சந்திப்பின்போது இராணுவத்தின் லெப்டினன்ட் கேர்னல் தர அதிகாரி ஒருவர், இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தானிடம், யுத்தம் முடிவடைந்த பின்னர், 64ஆவது பிரிவு நிறுவப்பட்ட காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு பிரதேச செயலாளரின் அங்கீகாரம் தேவை எனக் கோரினார்.

காணிப் பிரச்சினை ஒன்று உள்ளது. 64ஆவது பிரிவு இடம். 2009 முதல் பயன்படுத்தப்படுகிறது. இன்னும் கையகப்படுத்தப்படவில்லை.' 64ஆவது பிரிவு அமைக்கப்பட்டுள்ள காணிக்குப் பதிலாக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு வேறு காணியை வழங்கியுள்ளதாக அரசாங்கத்தின் அரசியல்வாதியிடம் இராணுவ அதிகாரி தெரிவித்த கருத்து உண்மையல்ல என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட 25 ஏக்கர் காணிக்குப் பதிலாக வேறு காணியை இராணுவம் வழங்கியதாக பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இராணுவ அதிகாரி தெரிவித்த கருத்தை மறுக்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முல்லைத்தீவு பிராந்திய பிரதிப் பணிப்பாளர், 64ஆவது படைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ள இடம், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு மிக முக்கியமான இடம் எனத் தெரிவிக்கின்றார்.

பிரதேசத்தில் நீர்ப்பாசனப் பணிகளுக்காகத் தயார்ப்படுத்தப்பட்ட இடம் என ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முல்லைத்தீவு பிராந்திய பிரதிப் பணிப்பாளர் சிவபாதசுந்தரம் விஹிர்தன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் களஞ்சியசாலை மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு அது முக்கியமான இடம் எனவும் தெரிவித்துள்ளார்.

64ஆவது பிரிவு அமைக்கப்பட்டுள்ள காணி தமது திணைக்களத்துக்குச் சொந்தமாக இருந்த காலத்தில் விவசாய பிரதேசமான முல்லைத்தீவில் உள்ள அனைத்து குளங்களையும் தம்மால் இலகுவாக நிர்வகிக்க முடியுமாக இருந்ததாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தின் எந்தவொரு பிரதேசத்தில் இருந்தும் விவசாயிகள் அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு ஏற்ற இடமாக இது காணப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான் நீர்ப்பாசன திணைக்களத்துடன் கலந்துரையாடி பிரச்சினையைத் தீர்க்குமாறு, இராணுவ அதிகாரியிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களத்துக்கு கடிதம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பி.ஜெயராணி குறிப்பிட்டுள்ளார்.

# சட்டமா அதிபரின் செயற்பாடு கடும் அதிருப்தியளிக்கின்றது

## பீரிஸ் குற்றச்சாட்டு



எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் வழக்கு தாக்கல் செய்வது 23 மாதங்கள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. சட்டமா அதிபரின் செயற்பாடு அதிருப்தியளிக்கின்றது.

கிடைக்கப் பெறும் நட்டஈட்டு தொகை வழக்கு விசாரணை நடவடிக்கைகளுக்கு மாத்திரமே போதுமானதாக அமையும்,நாட்டுக்கு ஏதும் மிகுதியாகாது என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகி கடல்வளங்களை இல்லாதொழித்த எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் உரிய கப்பல் நிறுவனத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய எந்த நடவடிக்கையும் கடந்த 23 மாதங்களாக எடுக்கப்படவில்லை. இறுதி தருணத்தில் தான் அவசரமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயத்தில் சட்டமா அதிபரின் செயற்பாடு அதிருப்தியளிக்கிறது.

இந்த கப்பல் விவகாரத்தில் சாமர குணசேகர என்பவருக்கு 250 மில்லியன் டொலர் இலங்கை நாணய அலகின் பிரகாரம் 80 ஆயிரம் மில்லியன் ரூபா இலஞ்சம் பிரித்தானியவங்கியில்வைப்பிலிடப்பட்டுள்ளதாகநீதியமைச்சர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

ஒரு தனிநபர் வங்கிக் கணக்கில் இவ்வாறான பாரிய நிதியை வைப்பிலிடும் போது வங்கி பல கேள்விகளை கேட்கும். பிரித்தானிய வங்கிக் கட்டமைப்பில் நிதி தூய்மைப்படுத்தல் சட்டம் முழுமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.ஆகவே நீதியமைச்சரின் கருத்து தொடர்பில் இதுவரை உண்மை தன்மை வெளிப்படவில்லை.

நட்டஈடு பெற்றுக் கொள்வதற்கான வழக்கினை சிங்கப்பூர் நாட்டின் வணிக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததை நீதியமைச்சர் நியாயப்படுத்துகிறார்.சர்வதேச சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் வழக்க தாக்கல் செய்திருக்கலாம்.இந்த வழக்கு விவகாரம் மக்களின் கவனத்தில் இருந்து தூரமாக்கப்பட்டுள்ளது.நாட்டு மக்களுக்கும்,இந்த வழக்குக்கும் எவ்வித தொடர்பும் இல்லாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கு செலவாகும் நிதி இந்த நட்டஈடு ஊடாகவே வழங்கப்படும். ஆகவே சட்ட நிறுவனங்கள்,வழக்கு விசாரணை ஆகியவற்றுக்கு மாத்திரம் நட்டஈடு தொகை போதுமானதாக அமையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதும் கிடைக்காது. கடல் வளங்களுக்கு ஏற்பட்ட அழிவு மாத்திரம் மிகுதியாகும். – என்றார்.

# பிளாஸ்டிக் பொம்மைகளால் குழந்தைகளுக்கு ஆபத்து

## பெற்றோருக்கு விடுக்கப்பட்டுள்ள முக்கிய அறிவுறுத்தல்



பிளாஸ்டிக் பொம்மைகளால் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து குறித்து பெற்றோருக்கு முக்கிய அறிவுறுத்தலொன்று விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பிளாஸ்டிக் பொருள்களால் உடல்நலக் கோளாறுகள் ஏற்படுவதால் மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகளை குழந்தைகளுக்கு கொடுப்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, பிளாஸ்டிக் பொம்மைகள் சிறு குழந்தைகளின் ஆரோக்கியத்துக்குப் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதால், பிளாஸ்டிக் பொம்மைகளின் உற்பத்தி மற்றும் விற்பனையை கட்டுப்படுத்துவதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது.

பிளாஸ்டிக் பொம்மைகள் உற்பத்தி மற்றும் விற்பனையை மட்டுப்படுத்துவது தொடர்பாக அந்த அதிகாரசபையில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொம்மைகளில் பிளாஸ்டிக் மட்டுமன்றி கனரக உலோகங்கள் அடங்கிய பல்வேறு வகையான வர்ணங்களும் அடங்கியுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் சரோஜனி ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் பிளாஸ்டிக் பொருள்களால் உடல்நலக் கோளாறுகள் ஏற்படுவதால் மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகளை குழந்தைகளுக்குக் கொடுப்பதில் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

# வீதியில் சென்ற பெண்ணிடம் பல லட்சம் ரூபா கொள்ளை!

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட உடையார்கட்டு நகர் பகுதியில் பெண்ணொருவரிடமிருந்து பெருந்தொகை பணம் கொள்ளையிடப்பட்டுள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

வங்கி ஏ.டி.எம். இயந்திரத்திலிருந்து பணம் எடுத்து சென்ற பெண்ணின் பணப்பையை மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

அதன்படி குறித்த பெண்ணிடம் இரண்டு லட்சத்து 80 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# பிராந்திய கொன்சியூலர் அலுவலகத்தின் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன

வெளி விவகார அமைச்சின் கொன்சியூலர்பிரிவின்யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை, மாத்தறை மற்றும் குருணாகல் ஆகிய பிரதேச காரியாலயங்கள் ஊடாக ஆவணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுவரும் செயற்பாடுகள் மறு அறிவித்தல் வரை வரையறுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளி விவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் கணணி கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறே இதற்குக் காரணமாகும் எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்ததொழில்நுட்பபிரச்சினையை கூடிய விரைவில் திருத்தி , மீண்டும் செயற்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும், தற்போதைக்கு அத்தியாவசியமான ஆவணங்கள் மாத்திரம் கொன்சியூலர் பிரிவின் ஊடாக உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த தொழில்நுட்ப கோளாறு காரணமாக, பொது மக்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு வருந்துவதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், பொது மக்கள் தங்களது சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு, கொழும்பு காரியாலயம் - 011 - 2338812, யாழ்ப்பாணம் - 021 -2215972 , திருகோணமலை - 026 -2223182, கண்டி - 081 238 4410, குருணாகல் - 037- 2225931, மாத்தறை - 041-2226713 ஆகிய தொலைபேசி இலக்கங்களைதொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## எப்போது செய்யப் போகின்றோம்?

ஈழப் போரின் இறுதிக் கட்டத்தில் மனிதப் பேரவலம் ஏற்படுத்தப்பட்டு மனித உரிமைகள் மீறப்பட்டன, போர்க் குற்றங்கள் நிகழ்ந்துள்ளன, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதை உலகமே ஏற்றுக்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடத்திய விசாரணைகளில் இது தொடர்பான விவரங்கள் தெளிவாக இருக்கின்றன.

அவ்வாறு இந்த உலகமே ஏற்றுக்கொண்ட ஓர் மனித குலக் குற்றங்களின் நினைவு நாளைப் பாதிக்கப்பட்டவர்களான தமிழர்கள் சரியாகவும் திட்டமிட்டும் செம்மையாகவும் மேற்கொள்கிறார்களா? என்றால் இல்லை என்பதே உண்மையான பதில்.

முதலில் இந்த நினைவேந்தல் அரசியல்வாதிகளால் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டது. வைகாசி 18 முள்ளிவாய்க்காலுக்குச் சென்று அஞ்சலி செலுத்துவதாக இது தொடங்கியது. பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தவரான க.வி.விக்னேஸ்வரனின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் அப்போதிருந்தவர்கள்அவரைஆதரித்துநின்றுஅதனைஅவரது நிகழ்வாகவே ஆக்கினார்கள். ஏனைய மூத்த தலைவர்ளை அவமதித்தார்கள். அளவுக்கு மீறிய அரசியலின் காரணமாக அந்த ஏற்பாட்டுக் குழுக்கள் நினைவேந்தல் கட்டமைப்பாக வளர முடியாத நிலையிலிருந்தன.

அதன் பின்னர் நினைவேந்தலில் அரசியல் தலையீடும் வேண்டாம் அரசியல்வாதிகளும் வேண்டாம் என்ற குரல் பலமாக ஒலிக்க, ஏன் வீண் வம்பு என்று அரசியல்வாதிகளும் ஒதுங்கிக்கொண்டனர். நினைவேந்தல் நாளில் முள்ளிவாய்க்கால் முற்றத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்துவதுடன் தமது கடமையை அவர்கள் முடித்துக்கொண்டனர். அதன் பின்னர் பொதுக் கட்டமைப்பு

ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆரவாரமாக வன்னியில் இருந்த பலரையும் உள்ளடக்கி இந்தப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், அந்தக் கட்டமைப்பு இப்போது எங்கே? அதில் உள்ள ஒரு சிலர் மட்டுமே இப்போது செயற்படுகின்றார்கள். பொதுக் கட்டமைப்பில் இருந்தவர்களுக்கு இடையிலான கருத்து மோதல்கள் அல்லது ஒற்றிமையின்மைகள் காரணமாக அதன் இயக்கம் முழுமையானதாக இல்லை. ஒரு சிலர் மட்டுமே செயற்படும் நிலையே இருக்கின்றது.

உலகின் 21ஆம் நூற்றாண்டின் பெரும் இனப் படுகொலைகளில் ஒன்றான தமிழினப் படுகொலையை நினவேந்தும் விதமும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் குழு இயங்கும் விதமும் இதுதானா?

ஒரு பெரும் நிகழ்வை, அடுத்தடுத்த தலைமுறைக் கடதலை நிகழ்த்தவேண்டிய நிழ்வை இப்படி ஒரிருவர் அறிக்கைளை விடுப்பதன் மூலமும், அன்றைய தினத்தில் தீப்பந்தங்களைக் கொழுத்துவதன் மூலமும் மட்டும்தான் செய்யப்போகின்றோமா?

தற்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வை பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கின்றார்கள். அது நினைவேந்தலின் ஓர் அங்கமான சிறப்பான நடவடிக்கை. அதுபோன்ற எத்தனையோ நிகழ்வுகள் இன்று தொடங்கும் நினைவு வாரத்தில் இடம்பெற வேண்டாமா?

இனப் படுகொலையின் கண்காட்சிகளா, கருத்தரங் குளாக, ஆய்வரங்குகளாக, காணொலிக் காட்சிகள் அல்லது திரைப்படக் காட்சிளாக, ஆவணப் படங்கள் மற்றும் நூல் வெளியீடுகளாக, உறவுகளின் நினைவு ஆற்றுப்படுத்தல்களாக அவை சிறிதும் பெரிதுமாக இடம்பெறவேண்டாமா? தமிழர்களிடம் மட்டுமல்ல சிங்கள வர்களிடமும் நடந்த அவலங்களை எடுத்துச் செல்லும் வகையில் பெரு நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவேண்டாமா?

அதற்குஇப்போதிருக்கும்முள்ளிவாய்க்கால்பொதுக்கட்டமைப்பு தகுதியையும் வல்லமையையும் கொண்டிருக்கின்றதா? நினைவேந்தலில் இருந்து அரசியல் நீக்கப்பட்டதன் மூலம் சாதிக்கப்பட்டது என்ன? நினைவேந்தலே ஓர் அரசியல் நகர்வுதான் என்னும்போது அதிலிருந்து அரசியல்வாதிகளை முறற்றிலுமாக நீக்குவது சரியானதா? நாம் சிந்திக்கவேண்டுமல்லவா?

சரியான கட்டமைப்பையும் தெளிவான சிந்தனையும் செயற்றிறன் உள்ளவர்களையும் கொண்ட நிரந்தரமான பொதுக் கட்டமைப்பு ஒன்று நிதி வளத்துடன் உருவாக்கப்படுவதும் அது ஆண்டு முழுவதும் இந்த ஒரு வார கால விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்காக உழைப்பதும் கட்டாயமல்லவா? எப்போது அதைச் செய்யப்போகின்றோம்?

# பிரித்தானிய உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணத்தினை சேர்ந்தவர் வெற்றி!

### குவியும் பாராட்டுக்கள்



பிரித்தானியாவில் சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் இலங்கை தமிழர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜெய்கணேஷ் என்பவர் லேபர் கட்சி மற்றும் லிபரல் கட்சி வேட்பாளர்களை தோற்கடித்து அபார வெற்றி பெற்றுள்ளார்.

இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிறந்த ஜெய்கணேஷ், லண்டன் மெட்ரோபாலிட்டன் பல்கலையில் சர்வதேச சுற்றுலா தொடர்பில் பட்டப் படிப்பு முடித்தவர் ஆவார்.

இவர் தனது வெற்றி தொடர்பில் தெரிவிக்கையில் –

ஸ்டோக் மற்றும் டீன் நகர சபையின் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஸ்டோக் மற்றும் டீன் நகர சபையின் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஒரேயொரு வாரத்தில் என்னால் டெங்கை கட்டுப்படுத்த முடியும்

### மேர்வின் சில்வா சவால்



ஒரே வாரத்தில் தம்மால் டெங்கு பரவுகையை கட்டுப்படுத்த முடியும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தமக்கு சந்தர்ப்பம் வழங்கினால் டெங்குவை கட்டுப் படுத்திவிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு ஒழிப்பு பிரிவின் உயர் அதிகாரிகள் மற்றும் சுகாதாரத் தரப்பினருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு திட்டத்தில் அமைச்சர்கள் பங்கேற்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய சுகாதார அமைச்சர் தமது நல்ல நண்பர் எனவும், தற்போது அவருக்கு என்னவாயிற்று என்பது தமக்குத் தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அனைத்து அதிகாரிகளையும் பேச்சுக்கு அழைத்து டெங்குவை கட்டுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பை மேற்கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம வழங்குமாறு அவர் அரசாங்கத்திடம் கோரியுள்ளார். எந்தவிதமான சம்பளங்களோ, வாகனங்களோ, பதவிகளோ வழங்காது டெங்கு ஒழிப்பு பொறுப்பை மட்டும் வழங் குமாறு அவர் கோரியுள்ளார். டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் போது அறிவுறுத்தல்களை செவிமடுக்காதவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சளி, காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் உடன் வைத்தியசாலையை நாடுங்கள்!

### விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்



2023 ஆம் ஆண்டு மாத்திரம் நாட்டில் 2 ஆயிரத்து 800 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி காய்ச்சல் அல்லது எலிக்காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறுமாறு சங்கத்தின் மருத்துவர்கள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக தொற்றுநோயியல் துறையின் தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் துானி தாபரே தெரிவிக்கையில் –

இந்த பாக்டீரியம் பெரும்பாலும் எலிகளின் உடலில் உள்ளது,

இது இந்த நோயைப் பரப்ப உதவுகிறது. நெல் வயல்கள், சில நீர் நிலைகள் மற்றும் கால்வாய்கள் போன்ற இடங்களில் எலிக்காய்ச்சல் வழக்குகள் பதிவாகியுள்ளன.

காய்ச்சல் என்பது ஒரே நேரத்தில் இரண்டு முதல் மூன்று வரை உயரும் நோய். மதியம் காய்ச்சல் ஆரம்பித்து மாலையில் மிகவும் கடினமாகிவிடும். அதன் பிறகு, அதிகப்படியான உடல் வலி. தலைவலி, பசியின்மை, வாந்தி போன்ற அறிகுறிகளுடன் கண்கள் மஞ்சள் நிறத்தில் தோன்றும். அதன் பிறகு, பல உறுப்புகள் பாதிக்கப்படும். இதயம், நுரையீரல் அல்லது சிறுநீரகங்களில் நிகழலாம். அவை மரணத்தை ஏற்படுத்தலாம்.

எனவே, இந்த நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவமனையை நாடினால் பல உயிர்களைக் காப்பாற்றலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஐஸ்போதைப் பொருளுடன் 3 பேர் காத்தான்குடியில் வைத்து கைது!

காத்தான்குடி பிரதேசத்தில் இரு வெள;வேறு இடங்களில் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 3 பேரை புதன்கிழமை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான புதன் பகல் காத்தான்குடி பர்ஸான் வீதியில் வைத்து 25 மற்றும் 28 வயதுடைய இருவரை மடக்கிபிடித்து கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து 50, மற்றும் 60 மில்லிக்கிராம் ஐஸ்போதைப்பொருளை மீட்டனர்.

அதேவேளை ரெலிகோம் வீதியில் வைத்து 190 மில்லிக்கிராம் ஐஸ்போதை பொருளுடன் 33 வயதுடைய ஒருவரை கைது செய்தனர். இவ்வாறு இரு வேவ்வேறு சம்பவங்களில் 300 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 3 பேரை கைது செய்ததுடன் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலஸார் தெரிவித்தனர்.

# 75 வயது வயோதிபப் பெண் மீது மது போதையில் துஷ்பிரயோகம்!

### சந்தேகநபர் தலைமறைவு

மது போதையில் இருந்த நபர் ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான 75 வயதுடைய வயோதிபப் பெண் பதுளை மாகாண பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய 51 வயதுடைய சந்தேக நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதுடன், அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பத்துடன் தொடர்புடைய நபர் அதிக போதையில் காணப்பட்டார் என அருகில் இருந்தோர் தகவல் வழங்கியுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ள பொலிஸார் சந்தேக நபரை தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டுள்ளனர்.